இயேசுவோடு இணைந்த நிலையில் இறந்தோரைக் கடவுள்
அவருடன் அழைத்து வருவார் 1 தெசலோனிக்கர் - 4 : 14

# முதலாம் ஆண்டு நினைவு தினம்



# ஜெயசீலி டேவிட்

பிறப்பு : 18.04.1954 இறப்பு : 19.09.2024

# விண்ணக வாழ்வின் ஒளியில் ஒரு ஆண்டு

நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்
என் ஓட்டத்தைமுடித்துவிட்டேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்.
இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான
வெற்றிவாகையே. அதை இறுதி நாளில் ஆண்டவர்
எனக்குத் தருவார். (2தீமோத்தி 4: 7-8)



# ஜெயசீலி டேவிட்

**பிறப்பு:** 18.04.1954 † **இறப்பு:** 19.09.2024

# அம்மாவிற்கு
## ஒரு அன்பு கவிதை

எங்கள் உயிரின் உயிராய்,
மூன்று குழந்தைகளின் முப்பெரும் தோளாய்,
அனைத்து உறவுகளுக்கும் ஓர் அருமை நட்பாய்,
அன்னை போல வாழ்ந்தாய் நீ,
அன்பு மழையால் உயிர்களை நனைத்தாய் நீ
முப்பது வருடங்களாய் பல இரு மனங்களை
திருமண பந்தத்தில் இணைத்த தேவதை நீ
தோழமையில் தொலைந்தவர்கள் கூட
உன் வார்த்தையில் வாழ்க்கை கண்டார்கள்.
அன்பால் சிரித்து, நம் குடும்பத்தை நல் வழியில் இட்டாயே!
புனித பாத்திமா மரியையை நேசித்தாய்,
திருச்சபைக்காக உன் வாழ்நாளை அர்ப்பணித்தாய்.
உன் பணியில் எளிமை ஒரு உதாரணம் ஆனது.
உன் நம்பிக்கையின் ஒளி எங்கள் வாழ்வை வழிநடத்துகிறது.
நீ ஒரு அற்புதமான மனைவி,
உன் கணவரின் வாழ்வில் ஒளியாய் இருந்தாய்.
விழிகளில் சிரிப்பு; இதயத்தில் கருணை.
இப்போது இறைவனின் மடியில்
விண்ணுலகத்தை கூட இன்னும் அழகாக்குகிறாய்.
உலகில் 70 ஆண்டுகள் வாழ்ந்தாலும்,
உம் நினைவு எங்களுக்கு நூற்றாண்டுகளாய்!

## அம்மா

உம் அன்பு எங்களுக்கு வழிகாட்டி
உம் பாதையில் நாங்களும் நடக்க
இறைவனை வேண்டும்
அன்பு கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள் மற்றும் நண்பர்கள்

# விண்ணக வாழ்வின் ஒளியில் ஒரு ஆண்டு



இதன்றியே நாங்கள் இந்தப் பரதேசம் கடந்த பிற்பாடு
உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுநாதருடைய
பிரத்தியட்சமான தரிசனத்தை எங்களுக்குத் தந்தருளும்.
கிருபாகரியே, தயாபரியே, பேரின்ப இரசமுள்ள கன்னிமரியாயே!

## விண்ணக வாழ்வின் ஒளியில்
## ஒரு ஆண்டு

# குடும்ப ஜெபம்

**ஒரு குடும்பம் சேர்ந்து ஜெபித்தால்,
அது சேர்ந்து வாழும்.**



அந்த இருளிலும் ஒளி சுடரும் வெண் தணலிலும் மனம் குளிரும்
உந்தன் கண்களின் இமை போல் எந்நாளும் என்னை காத்திடு என் இறைவா

## சிலுவை அடையாளம்

தந்தை மகன் தூய ஆவியின் பெயராலே. – ஆமென்

## கர்த்தர் கற்பித்த ஜெபம்

விண்ணுலகில் இருக்கிற / எங்கள் தந்தையே!
உமது பெயர் / தூயது எனப் போற்ற பெறுக /
உமது ஆட்சி வருக உமது திருவுளம்
விண்ணுலகில் நிறைவேறுவதுபோல
மண்ணுலகிலும் நிறைவேறுக!
எங்கள் அன்றாட உணவை
இன்று எங்களுக்கு தாரும்
எங்களுக்கு எதிராக குற்றம் செய்வோரை
நாங்கள் மன்னிப்பது போல
எங்கள் குற்றங்களை மன்னியும்.
எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும்
தீமையில் இருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.

## மங்கள வார்த்தை ஜெபம்

அருள் மிக பெற்ற மரியே வாழ்க!
ஆண்டவர் உம்முடனே பெண்களுக்குள்
ஆசி பெற்றவர் நீரே உம்முடைய திருவயிற்றின்
கனியாகிய இயேசுவும் ஆசி பெற்றவரே.

தூய மரியே! இறைவனின் தாயே!
பாவிகளாக இருக்கிற எங்களுக்காக
இப்பொழுதும், எங்கள் இறப்பின் வேளையிலும்
வேண்டிக்கொள்ளும். ஆமென்.

இம்மை வாழ்வில் மறுமை இருப்பது நிரந்தரம்
நான் மாண்ட பின்பும் உன்னில் உயிர்ப்பது நிரந்தரம்.

## பத்து கட்டளைகள்

1. உன் கடவுள் நாமே. வேறு கடவுள் உனக்கு இல்லை.
2. உன் கடவுளாகிய ஆண்டவரின் திருப்பெயரை வீணாகப் பயன்படுத்தாதே.
3. ஓய்வுநாளைத் தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாய் இரு.
4. உன் தந்தையையும் தாயையும் மதித்து நட.
5. கொலை செய்யாதே.
6. விபச்சாரம் செய்யாதே.
7. களவு செய்யாதே.
8. பிறருக்கு எதிராகப் பொய்ச்சான்று சொல்லாதே.
9. பிறர் மனைவி மீது ஆசை கொள்ளாதே.
10. பிறருக்கு உரியது எதையும் கவர்ந்திட விரும்பாதே.

இந்தப் பத்துக் கட்டளைகளும் இரண்டு கட்டளைகளில் அடங்கும்.
முதலாவது எல்லாவற்றிற்கும் மேலாக கடவுளை அன்பு செய்வது.
இரண்டாவது தன்னை அன்பு செய்வது போல பிறரையும் அன்பு செய்வது.

நிலையில்லா இந்த பூவுலகில் நித்தம் உன்பாதையிலே
நின்சித்தம்போல் உன்கரத்தால் நித்தம் வழிநடத்தும்



## பரிசுத்த ஆவி ஜெபம்

பரிசுத்த ஆவியே தேவரீர் எழுந்தருளி வாரும். பரலோகத்திலே உம்முடைய திவ்வியபிரகாசத்தின் கதிர்களை வரவிடும். தரித்தர்களுடையே பிதாவே, கொடைகளைக் கொடுக்கிறவரே, இதயங்களின் பிரகாசமே எழுந்தருளி வாரும். உத்தம ஆறுதலானவரே, ஆத்துமங்களுக்கு மதுரமான விருந்தாளியே, பேரின்ப இரசமுள்ள இளைப்பாற்றியே பிரகாசத்தின் சுகமே, வெயிலின் குளிர்ச்சியே, அழுகையின் தேற்றரவே எழுந்தருளிவாரும். வெகு ஆனந்தத்தோடே கூடியிருக்கின்ற பிரகாசமே உமது விசுவாசிகளுடைய இதயங்களின் உற்பனங்களை நிரப்பும். உம்முடைய தெய்வீகமின்றியே மனிதரிடத்தில் குற்றமில்லாதது ஒன்றுமில்லை. அசுத்தமாயிருக்கிரதைச் சுத்தம் பண்ணும். உலர்ந்ததை நனையும். நோவாயிருக்கிரதைக் குணமாக்கும். வணங்காதை வணங்கப்பண்ணும். குளிரோடிருக்கிரதைக் குளிர்போக்கும். தவறினதை செம்மையாய் நடத்தும். உம்மை நம்பின உம்முடைய விசுவாசிகளுக்கு உம்முடைய திருக்கொடைகள் ஏழையும் கொடுத்தருளும். புண்ணியத்தின் பேறுகளையும், நல்ல மரணத்தையும், நித்திய மோட்சானந்த சந்தோஷத்தையும் எங்களுக்குத் தந்தருளும். ஆமென்.

முதலாகி முடிவாகி முழுதான அன்பாகி மூன்றாகி ஒன்றானவா
இனிதாகக் கனிவாக அருள்வாழ்வின் நிறைகாணஎனைத் தேர்ந்த என் மன்னவா

## இயேசு நாதருடைய திரு இருதயத்துக்கு தங்கள் குடும்பங்களைஒப்புக்கொடுக்கிற ஜெபம்

இயேசுவின் திரு இருதயமே! கிறிஸ்துவ குடும்பங்களுக்கு தேவரீர் செய்து வரும்சகல உபகாரங்களையும், சொல்ல முடியாத உமது நன்மைத்தனத்தையும் நினைத்து நன்றியறிந்த பட்சத்தோடு உமது திருப்பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து கிடக்கிறோம். நேசமுள்ள இயேசுவே! எங்கள் குடும்பங்களிலுள்ள சகலரையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். தேவரீர் எங்களை ஆசீர்வதித்து, இப்போதும் எப்போதும் உமதுதிரு இருதய நிழலில் நாங்கள் இளைப்பாறச் செய்தருளும். தவறி எங்களில் யாராவது உமது திரு இருதயத்தை நோகச் செய்திருந்தால் அவர் குற்றத்துக்கு நாங்கள் நிந்தைப் பரிகாரம் செய்கிறோம். உமது திரு இருதயத்தைப் பார்த்து எங்கள் பரிகாரத்தை ஏற்றுக் கொண்டு அவருக்கு கிருபை செய்தருளும்.

இதுவுமன்றி உலகத்திலிருக்கும் எல்லா குடும்பங்களுக்காகவும் உம்மை மன்றாடுகிறோம். பலவீனர்களுக்கு பலமும், விருத்தாப்பியருக்கு ஊன்று கோலும், விதவைகளுக்கு ஆதரவும், அனாதைப் பிள்ளைகளுக்குத் தஞ்சமுமாயிருக்கத் தயைபுரியும். ஒவ்வொரு வீட்டிலும் நோயாளிகள், அவஸ்தைப்படுகிறவர்கள் தலைமாட்டில்தேவரீர் தாமே விழித்துக் காத்திருப்பீராக. இயேசுவின் இரக்கமுள்ள திரு இருதயமே! சிறு பிள்ளைகளை நீர் எவ்வளவோ பட்சத்தோடு நேசித்தீரே, இந்த விசாரணையிலுள்ள சகல பிள்ளைகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். அவர்களை ஆசீர்வதியும். அவர்களுடைய இருதயத்தில் விசுவாசத்தையும் தெய்வ பயத்தையும் வளரச் செய்யும். ஜீவிய காலத்தில் அவர்களுக்கு அடைக்கலமாகவும் மரணசமயத்தில் ஆறுதலாகவும் இருக்கும்படி உம்மை மன்றாடுகிறோம். திவ்விய இயேசுவே, முறை முறையாய் உமது திருச்சிநேகத்தில் ஜீவித்து மரித்து நித்திய காலமும் எங்கள் குடும்பம் முழுவதும் உம்மோடு இளைப்பாற கிருபை புரிந்தருளும். – ஆமென்.

**நினைவிலும் நீயே என் கனவிலும்**
**நீயேநீங்காத நிழலாக வா இறைவா**



## மிகவும் இரக்கமுள்ள தாயே

மிகவும் இரக்கமுள்ள தாயே! உமது அடைக்கலமாக ஓடிவந்து, உம்முடைய உபகார சகாயங்களை இறைஞ்சி மன்றாடிக் கேட்ட ஒருவராகிலும் உம்மால் கைவிடப்பட்டதாக ஒருபோதும் உலகில் சொல்லக் கேள்விப்பட்டதில்லை என்று நினைத்தருளும். கன்னியருடைய இராக்கினியான கன்னிகையே! தயையுள்ள தாயே! இப்படிப்பட்ட நம்பிக்கையால் ஏவப்பட்டு உமது திருப்பாதத்தை அண்டி வந்திருக்கிறோம். பெருமூச்செறிந்து அழுது பாவிகளாயிருக்கிற நாங்கள் உமது தயாபரத்தில் காத்துநிற்கின்றோம். அவதரித்த வார்த்தையின் தாயே எங்கள் மன்றாட்டைப் புறக்கணியாமல் தயாபரியாய் கேட்டுத் தந்தருளும் தாயே. – ஆமென்.

ஜென்ம பாவம் இல்லாமல் உற்பவித்த கன்னிமரியே பாவிகளுக்கு அடைக்கலமே இதோ உமது அடைக்கலமாக ஓடி வந்தோம் எங்கள் மேல் இரக்கமாய் இருந்து எங்களுக்காக உமது திரு குமாரனிடம் வேண்டிகொள்ளும். ஜென்ம பாவம் இல்லாமல் உற்பவித்த கன்னிமரியே பாவிகளுக்கு அடைக்கலமே இதோ உமது அடைக்கலமாக ஓடி வந்தோம் எங்கள் மேல் இரக்கமாய் இருந்து எங்களுக்காக உமது திருக்குமாரனிடம் வேண்டிகொள்ளும். ஜென்ம பாவம் இல்லாமல் உற்பவித்த கன்னிமரியே பாவிகளுக்கு அடைக்கலமே இதோ உமது அடைக்கலமாக ஓடி வந்தோம் எங்கள்மேல் இரக்கமாய் இருந்து எங்களுக்காக உமது திருக்குமாரனிடம் வேண்டிகொள்ளும்.

**மங்கள வார்த்தை ஜெபம் – 3**

**அலைமோதும் உலகினிலே ஆறுதல் நீ தர வேண்டும்**
**அண்டி வந்தோம் அடைக்கலம் நீ ஆதரித்தே அரவணைப்பாய்**

## குழந்தை இயேசுவின் புதுமை நிறைந்த ஜெபம்



அற்புத குழந்தை சேசுவே! அமைதி அற்ற எங்கள் உள்ளங்களின் மேல் உம் கருணைக்கண்களைத் திருப்பியருளுமாறு தாழ்ந்து, பணிந்து, வணங்கி வேண்டுகிறோம். இரக்கமே உருவான உம் இனிய இதயம் கனிவோடு எங்கள் செபத்தை ஏற்று உருக்கமாக நாங்கள் வேண்டும் இந்த வரத்தை அளித்தருளுமாறு உம்மை இறைஞ்சுகிறோம். **(வேண்டிய வரத்தை இங்கு குறிப்பிடுக)** எங்களை வாட்டிவதைக்கும் துன்ப துயரங்களையும், வேதனை, சோதனைகளையும், நீக்கி உம் குழந்தை திருப்பருவத்தின் பெயரால் எங்கள்மன்றாட்டை ஏற்றருளும். அதனால் உம் ஆறுதலையும் ஆதரவையும் பெற்று, தந்தையோடும் தூய ஆவியோடும் உம்மை என்றென்றும் நாங்கள் வாழ்த்திப் போற்றுவோமாக! குழந்தை சேசுவே! என் செபத்தை ஏற்றருளும் என் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும். – ஆமென்.

## புனித அந்தோனியார் ஜெபம்



இதோ ஆண்டவருடைய சிலுவை சத்துராதிகளாகிய நீங்கள் அகன்று போகக் கடவீர்கள். அல்லேலூயா! அல்லேலூயா! அல்லேலூயா! யூதா கோத்திரத்தின் சிங்கமும் தாவீதின் சந்ததியுமானவர் ஜெயங்கொண்டார். அல்லேலூயா! நரக வல்லமையை அடக்கின புனித அந்தோணியாரே! இயேசு கிறிஸ்து நாதருக்கும் சத்திய வேதத்திற்கும் சத்துராதிகளாய் இருக்கிறவர்கள் எல்லோரையும் சிதறடிப்பதுமல்லாமல் துன்மார்க்கங்களையும், துர்க்குணங்களையும் நிர்மூலமாக்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.
– ஆமென்.

**உலகம் யாவும் வெறுமையே உன்னை யான் பெறும்போது**
**உறவு என்று இல்லை உன் உறவு வந்ததால்**

## திரு சிலுவை ஜெபம்

திருச்சிலுவையே திருச் சிலுவையே
எனக்கு வெளிச்சமாய் இருக்க கடவது
நரக சர்வாதிபதி ஆக வேண்டாம்
அப்பாலே போ சாத்தனே
அபத்தங்களை போதிக்காதே
நீ போதிப்பதெல்லாம் தீது
நீயே என் நஞ்சை உட்கொள்.

## பூண்டி மாதா ஜெபம்

ஓ மகா பரிசுத்த தமதிருத்துவமே, உமது
படைப்பு, மீட்பு, பராமரிப்பு உம் திருவுளம் நிறைவேற
எங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களை விலக்கி நாங்கள்
ஆசிக்கும் நன்மை அருளும்.

**கர்த்தர் கற்பித்த ஜெபம்...**
**மங்கள வார்த்தை ஜெபம்...**
**தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவிக்கும்...**

பூலோகம் போற்றும் பூண்டி புதுமை மாதாவே
எங்களுக்கு ஏற்பட்ட கஷ்டம் விலக வேண்டும்
எதிர்பார்க்கும் நன்மை கிடைக்க வேண்டும்
எங்கள் குடும்பம் விளங்க வேண்டும்
இதனால் பூமியில் உமது
மகிமை விளங்க வேண்டும்.

**அருள் நிறைந்த மரியே (3 முறை)...**
**தந்தைக்கும், மகனுக்கும் தூய ஆவிக்கும்...**

**பரந்து விரிந்த உலகம் படைத்து சிறந்த படைப்பாய்**
**என்னைக் கண்ட தேவனே என் ஜீவனே**

# புனித அன்னம்மாளிடம் ஜெபம்

மகா பரிசுத்தமும் இரக்கமும் அனுக்கிரகமும் நிறைந்த புனித அன்னம்மாளே! தேவமாதாவின்தாயே! நீர் எம்மாத்திரம் சர்வேசுவரனால் சிநேகிக்கப்பட்டிருக்கிறீர்? நீர் கேட்கும் மன்றாட்டைஅவர் தள்ளிப் போடுகிறதில்லை என்று அறிந்திருக்கிற நாங்களும் உமது திருப்பாதத்தை அண்டி வருகிறோம். உம்மால் உலகில் நடந்த புதுமைகளுக்குக் கணக்கில்லையே. வரப்பிரசாதத்தைத் தாராளமாய்க் கொண்ட புனிதஅன்னையே, நாங்கள் மெய்யான சம்சாரிகளாய் நடந்து வாய்க்காலோரத்தில் நடப்பட்ட மரம்போலச் சம்சாரத்தில் நற்கனி தந்து எங்கள் துன்பங்களில் ஆறுதலடைந்து பொறுமைகொண்டு எங்களுக்கு ஆண்டவர் தந்த பிள்ளைகளை நன்னெறியில் நடப்பிக்கும் வரத்தை நாங்கள் அடையப் பண்ணியருளும். நாங்கள் குடும்ப வாழ்வில் ஒருமனப்பட்டு அயல் வீட்டாரோடு சினேகமாய் வாழப்பண்ணும். சங்கையும், நற்கீர்த்தியும், ஒருமைப்பாடும், சம்சார வாழ்வில் பயபக்தியும் ஒடுக்க வணக்கமும் நாங்கள் பெறச் செய்தருளும். எங்கள் பிள்ளைகள் தேவ ஸ்துதியைக் கூறவும், நாங்கள் அறிவிலும் தேவ ஆசிர்வாதத்தில் உயரவும் செய்தருளும். அன்றன்றுள்ள அப்பத்தை நாங்கள் கொண்டு பசாசினாலும், பொல்லாத மனிதராலும் நாங்கள் வெல்லப்படாதிருக்கப் பண்ணியருளும். நாங்கள் வீட்டையும் அதிலுள்ளதையும் அக்கினிக்கும் வெள்ளத்திற்கும் திருடருக்கும் தப்பித்துவிட ஆண்டவரை மன்றாடும். கர்த்தர் நகரைக் காக்காவிடில் சாமக்காரன் விருதவாய் விழித்திருப்பான் அல்லோ? தேவ பக்தியும் உண்மையும் கீழ்ப்படிதலுமுள்ள ஊழியர்களை நாங்கள் அடையவும், எங்கள் பிள்ளைகளுக்குச் சரியான வாழ்க்கைத் துணை அமையவும் எங்களுக்காக மன்றாடும். எங்கள் உபத்திரவங்கள் இலேசாகவும், நாங்கள் நித்யமானவைகளை விரும்பவும் செய்தருளும். மகாஉன்னதமான வரப்பிரசாதங்களை அடைந்த பரிசுத்த அன்னம்மாளே! நாங்கள் தேவ வரங்களையே எந்நாளும் நாடி, அவரால், அவரில், அவரோடு வாழ்ந்து உய்வடைய எங்களுக்காக இறைவனை மன்றாடும். – ஆமென்.

அனுதினம் உன்னை நான் அகத்தினில் நினைந்தேன் ஆகிய மட்டும் அருந்தவம் புரிந்தேன்
எனக்கிந்த வேலை வந்து இரங்குவாய் அம்மா இறைஅடி தொழுதேன் இயேசுவின் தாயே

## அம்மாவின் குடும்ப ஜெபம் (1980யில் ஆரம்பித்தது)

இயேசுவின் திரு இருதயமே, எங்கள் குடும்பத்தின் மீது இரக்கம் வைத்து நீர் இன்று எங்களுக்கு செய்த சகல உபகார நன்மைகளுக்காக நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம். குடும்பத்திலுள்ள அனைவரும் பக்தியிலும், படிப்பிலும், ஞானத்திலும் தேர்ச்சி பெற்று விளங்கும் படியாகவும், நாங்கள் நினைத்தகாரியங்கள் உமது சித்தத்தின்படி நடக்கும் படியாகவும், குடும்பத்திலுள்ள அனைவருக்கும் நல்ல சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொடுத்து ஆசீர்வதிக்கும் படியாகவும், நாங்கள் இருவரும் ஒருவர் ஒருவரை புரிந்து உணர்ந்து சந்தோஷத்துடன் சமாதானத்துடனும் வாழவும், குடும்பத்துக்கு வேண்டிய அருள் வரத்தையும் பண உதவியையும் கொடுத்து, பிள்ளைகளுக்குநல்ல உடல் நலத்தையும் கொடுத்து எல்லாவித தீமைகளிலிருந்தும், நோய்களிலிருந்து, கஷ்டங்களில் இருந்தும், கவலைகளிலிருந்தும் பிள்ளைகளைவிடுவித்து, ஆசீர்வதித்து பாதுகாக்கும் படியாகவும் கெஞ்சி மன்றாடுகின்றோம். நன்மை செய்யும் கருவிகளாக நாங்கள் ஒவ்வொரு நாளும் வாழ, வளர, நிலைக்க அருள் புரிய வேண்டும் என்று மன்றாடுகின்றோம். ஆமென்.

இயேசுவின் மகா பரிசுத்த இருதயமே, எங்கள் பேரில் இரக்கமாயிரும். மரியாயின் மாசற்ற இருதயமே, எங்கள் பேரில் இரக்கமாயிரும். திருக்குடும்பத்தின் தலைவரான புனித சூசையப்பரே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும் சகல புனிதர்களே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள். அர்ச்சியஷ்ட சிலுவை, அடையாளத்தினாலே, எங்கள் சத்துருக்களிடமிருந்து எங்களை இரட்சித்தருளும். எங்கள் சர்வேசுரா, பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே, ஆமென்

கிறிஸ்து ராஜா வாழ்க! உம்முடைய இராஜ்யம் வருக.
மரியே வாழ்க! மாரநாதா. ஆமென்.

வாழ்நாளெல்லாம் நீ வேண்டுமேவளர்ந்திட நாளும் வரம் வேண்டுமே
வாழ்வாய் வழியாய் நிறைந்திட வருவாய்

# தினசரி ஜெபங்கள்



## திங்கட்கிழமை
## காவல் தூதர்களை நோக்கி ஜெபம்

விண்ணுலக படைகளின் அதிபதியே! உன்னதகடவுளின் நம்பிக்கையை பெற்றதூதர்களே! இறைவனின் அரியனையருகில் நிற்கப் பேறு பெற்றவர்களே! கடவுளின் கட்டளைப்படியே விண்ணுலகிலும், மண்ணுலகிலும் வல்லமை பெற்ற சம்மனசுக்களே! கடவுளின் நீதி அரியணை முன் எங்களை அழைத்துச் செல்லும். எங்கள் போராட்டத்தில் எங்களைக் காத்தருளும். சாத்தானின் சோதனையின்போது எங்களுக்கு துணையாயிரும். மரணப் படுக்கையில் இருப்பவர்களுக்கு உதவி செய்ய விரைந்துவாரும். இறந்தவர்களுக்கு விண்ணக பேரின்ப வீட்டிற்கு கொண்டு போய் சேர்த்தருளும். எங்கள் வாழ்க்கை பயணத்தில் முன்னும் பின்னும், வளமும் இடமுமாய் இருந்து எங்களைப் பாதுகாத்தருளும். (நமது விண்ணப்பங்களை சொல்வோம்). நாங்கள் வேண்டிக்கொண்ட இந்த விண்ணப்பங்களை இறைவனிடமிருந்து பெற்றுத்தாரும். இறைவனின் கருணையால் உம்மிடம் ஒப்படைக்கப்பட்ட எங்களுக்கு ஞான ஒளியைத் தந்து எல்லாத் தீமைகளிலிருந்தும் எங்களை பாதுகாத்தருளும். ஆமென்.

பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே...
அருள் நிறைந்த மரியே வாழ்க...
பிதாவுக்கும் சுதனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்...

**ஆயிரம் குறைகள் என்னிடம் கண்டும் அணைத்திடவே வந்தார்**
**ஆண்டவர் இயேசு அன்பினால் என்னை மாற்றிடவே வந்தார்**



## செவ்வாய் கிழமை
## புனித அந்தோனியார் நவநாள் ஜெபம்

கோடி அற்புதரான புனித அந்தோனியாரே! இறைவனின் புனிதரே! ஆற்றல்மிகு போதகரே! எங்கள் குறைகளை கேட்பவரே, நீர் வாழ்க! அன்று பலஸ்தீன நாட்டிலே எல்லாவிதமான குறைகளை உடையோர் இயேசுவை நாடிச் சென்றனர். கடவுளின் அன்பையும், ஆற்றலையும், மன்னிப்பையும் நேரடியாக பெற்று திரும்பினர். இன்று இறைமக்களாகிய நாங்களும் உம்மை தேடிவருகின்றோம். தனிமை, நோய், ஏழ்மை, சமூக இன்னல்கள், வேற்றுமைகள், பாவங்களில் துன்புறும் நாங்களும் இறை அன்பை கண்டுகளிக்க உதவிபுரியும். கடவுளால் ஆகாதது ஒன்றும் இல்லை. தாழ்ந்தோரை உயர்த்துவார், பசியால்வாடுவோரை நலன்களால் நிரப்புவார். என்ற விசுவாசத்தோடு ஜெபிக்கவும் செயலாற்றவும் அருள் தாரும். மேலும் நாங்கள் விரும்பி கேட்க்கும் வேண்டுதலை கடவுளிடமிருந்து பெற்றுத்தாரும். என்றும், எங்கும் எப்பொழுதும் எங்களுக்காக மன்றாடும்.
– ஆமென்

பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே ...
அருள் நிறைந்த மரியே வாழ்க ...
பிதாவுக்கும் சுதனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் ..

**அகல்போல் எரியும் அன்பு அது பகல்போல் மணம் பரவும்**
**நிலையாய் உனை நினைத்தால் நான் மலையாய் உயர்வடைவேன்**

## புதன் கிழமை
## புனித சூசையப்பர் நவநாள் செபம்



எல்லாம் வல்ல எங்கள் அன்புத் தந்தாய், உம் ஒரே மகனின் வளர்ப்புத் தந்தையாக நீதிமானாக புனித சூசையப்பரைத் தேர்ந்தெடுத்தீரே. எங்களைக் காக்கவும் நல்வழியில் வளர்க்கவும் எங்களுக்கும் அவரைப்போன்றே காவலர்களைத் தந்தருளும். அதனால் உம் அன்பு மகன் இயேசுவைப்போன்று உருவாகும் இறைமக்கள் உமக்கு ஏராளமாகத் தோன்றுவார்களாக. இறைவனாயிருந்தும் உம்மையே சூசையப்பர் கையில் ஒப்படைத்து அவரது ஆதரவில் வளர்ந்த இயேசுவே, நாங்களும் எங்களை உருவாக்கும் பெற்றோர்களுக்கும், எங்கள் தலைவர்களுக்கும், திருச்சபைக்கும் எப்பொழுதும் எல்லாவற்றிலும் கீழ்ப்படிந்து நடக்க அருள்புரியும். திருக்குடும்பத்தை உமது திருவருளால் திறம்படக் காத்த நித்திய புனித ஆவியே, எங்கள் குடும்பத்தையும் இறைவனின் திருவுளத்திற்கேற்ப அமைத்து பாதுகாத்தருள்வீராக. இயேசுவை வளர்க்கும் பணியில் புனித சூசையப்பரை உமது வாழ்க்கையின் துணைவராகவும் உமது இல்லத்தின் தலைவராகவும் ஏற்றுக்கொண்டு அவருக்குக் கீழ்ப்படிந்து பணியாற்றிய புனித கன்னிமரியே, அவருடைய மேலான பாதுகாவலை எங்களுக்குப் பெற்றுத்தாரும் அதனால் நாங்கள் இவ்வுலக வாழ்வை இறைவனின் திருவுளத்திற்கேற்ப எளிமையில் அமைத்து நடப்போமாக. திருக்குடும்பத்தின் தலைவரான புனித சூசையப்பரே, எங்கள் குடும்பத்தைப் பாதுகாத்து வழிநடத்துவீராக. திருக்குடும்பத்தை உம் உழைப்பாலும் உணவூட்டிக் காத்த புனித சூசையப்பரே, எங்கள் அறிவாலும், உழைப்பாலும், எங்கள் வீட்டையும் நாட்டையும் பாதுகாத்து செழிப்புறச் செய்து துணைபுரிவீராக. குழந்தை இயேசுவை ஆபத்திலிருந்து காப்பாற்றிய புனித சூசையப்பரே, எங்கள் வாழ்க்கையின் ஆபத்துக்களிலிருந்து எங்களைப் பாதுகாத்தருளும். இயேசு மரியின் கைகளில் உம் ஆன்மாவை ஒப்படைத்து நன்மரணமடைந்த புனித சூசையப்பரே, நாங்களும் நல்மரணமடைய எங்களுக்காக மன்றாடுவீராக. ஆமென்.

பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே ... அருள் நிறைந்த மரியே வாழ்க ... பிதாவுக்கும் சுதனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் ...

**ஒரு கோடி விண்மீன்கள் தினம் தோன்றினும் நீயின்றி என் வாழ்வு இருள் சூழ்ந்திடும்**
**பிறர் அன்பை என் பணியில் நான் ஏற்கையில் உன் அன்பு உயிர் தந்து வாழ்வாகிடும்**



## வியாழக்கிழமை
## அற்புத குழந்தை இயேசுவின் நவநாள் ஜெபம்

அற்புதக் குழந்தை இயேசுவே! அமைதியற்ற எங்கள் உள்ளங்களின் மேல் உமது கருணைக் கண்களைத் திருப்பியருளுமாறு தாழ்ந்து பணிந்து, வணங்கி வேண்டுகிறோம். இரக்கமே உருவான உம் இனிய இதயம் கனிவோடு எங்கள் செபத்தைக் ஏற்று, உருக்கமாக நாங்கள் வேண்டும் இந்த வரத்தை அளித்தருளுமாறு உம்மை இறைஞ்சுகின்றோம். **(நமது விண்ணப்பத்தைக் குறிப்பிடுவோம்)** எங்களை வாட்டி வதைக்கும் துன்ப துயரங்களையும், வேதனை சோதனைகளையும் நீக்கி உமது குழந்தைதிருப்பருவத்தின் பெயரால் எங்கள் மன்றாட்டை ஏற்றருளும். அதனால் உமது ஆறுதலையும் ஆதரவையும் பெற்று தந்தையோடும் தூய ஆவியாரோடும் உம்மை என்றென்றும் நாங்கள் வாழ்த்திப் போற்றுவோமாக. ஆமென்.

பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே ...
அருள் நிறைந்த மரியே வாழ்க ...
பிதாவுக்கும் சுதனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் ...

**குறை நான் செய்தேன் இறைவா – பாவக்குழியில் விழுந்தேன் இறைவா**
**கறையாம் பாவத்தை நீக்கிடவே – நீகல்வாரி மலையில் இறந்தாயோ**

## வெள்ளிக்கிழமை
## திரு இருதய ஆண்டவர் ஜெபம்



இயேசுவின் திரு இருதயமே உம்மை எங்கள் இல்லத்தின் அரசராக ஏற்றுக்கொள்கிறோம். எங்கள் குடும்பத்திற்கு நீர் செய்துள்ள நன்மைகளை எல்லாம் நினைத்து பெருமகிழ்ச்சியோடு உமக்கு நன்றி கூறுகின்றோம். எங்கள் பாவங்களின் மூலமாக உமது அன்பு இதயத்தை நோகச் செய்வதற்கான மன்னிப்பு வேண்டுகிறோம். எங்கள் கிறிஸ்துவ கடமைகளையும், சமூக கடமைகளையும் உமது அன்பிற்காக ஆர்வமுடன் நிறைவேற்றி உமக்கு ஆறுதலும் மகிழ்ச்சியும் தரமீண்டும் தீர்மானம் செய்கின்றோம். இந்த தீர்மானத்தின்படி நடக்க எங்களுக்கு புத்துயிரும், மன மகிழ்ச்சியும் பேரார்வமும் தந்து எங்களை வழி நடத்தியருளும். உமது அன்பு இதயத்தை அறியாமலும், ஏற்றுக் கொள்ளாமலும் நீர் தரும் ஆறுதலை ஏற்றுக்கொள்ளாமலும், இருக்கும் குடும்பங்களை உமது அரசாட்சின் கீழ்கொண்டு வருமாறு வேண்டுகிறோம். உலகெங்கும் உமது அன்பரசு ஓங்கி வளர்ந்து எங்கள் மீட்பர் இயேசு கிறிஸ்துவே எம் அரசர் என்று பேரொலி எழுப்பி உண்மை மகிழ்ச்சியை பெறுவார்களாக. ஆமென்.

பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே ...
அருள் நிறைந்த மரியே வாழ்க ...
பிதாவுக்கும் சுதனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் ...

**இறைவனுக்கிதயம் உண்டு – அந்த இதயத்தில் இரக்கம் உண்டு – என்றும்
இரங்கிடும் இறைவன் இருப்பதனால் இங்கு அனைவர்க்கும் வாழ்வு உண்டு**



# பெரம்பலூர் பனிமய மாதா ஜெபம்

கடவுளின் திருமகனே! இறைமகன் இயேசுவின் அன்னையே! தூய ஆவியாருக்கு மிகவும் பிரியம் உள்ளவளே! உன் பிள்ளைகளாய் இருக்கின்ற நாங்கள் எல்லாரும் உமது பாதத்தில் பணிந்து விழுந்து எங்களை முழுமையாய் காத்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.


பிறப்பு நிலை பாவம் இன்றி கருவாகி உருவான அன்னையே! என் உயிர் உடலை விட்டு பிரியும் இறுதி நேரம், நாங்களும் பாவம் ஏதுமில்லாமல் இருக்க செய்தருளும். உம்மை நம்பும் எங்களை காத்தருளும். சிறப்பாக, நாங்கள் இம்மண்ணகம் விட்டு விண்ணகம் செல்லும் நேரம், எதிரியாகிய சாத்தானின் பிடியில் சிக்கி அழிந்து போகாதபடி, தகர்த்து எறிந்தருளும்.

நாங்கள் உன் மகனின் அருகில் வந்து மகிழ்வோடு வாழ எங்களுக்கு துணை புரியும். இதற்காக, உம் முழு நிறை ஆசிரை கேட்டு உம்முன் நிற்கின்றோம். உம் அருள் ஆசிரை பிள்ளைகளாகிய எங்களுக்கு வழங்கிட வேண்டுமென்று அன்னையே உம்மை மன்றாடுகிறோம். ஆமென்!

# புனிதருடன் பயணம்



எனக்காக மனுவுரு தரித்த நல்லன்பு எனக்காக தன்னையே உணவாக்கும் அன்பு
எனக்காக பாடுகள் ஏற்ற பேரன்பு எனக்காக உயிரையே தந்த தேவன்பு




**மன்றாடு, நம்பு,**
**கவலை கொள்ளாதே,**
**கவலை பயனற்றது.**
**கடவுள் இரக்கம் நிறைந்தவர்,**
**உன் மன்றாட்டுக்குச்**
**செவிசாய்ப்பார்.**

*– அர்ச். பாதரே பியோ (1887–1968)*

## புனித தந்தை பியோ (செப்டம்பர் 23)

ஐந்து காய வரம் பெற்ற முதற்குருவே, புனிததந்தை பியோவே, அனைத்து ஆன்மாக்களும் விண்ணகம் சேர, தொடர்ந்து பரிந்து பேசி, பாவிகளை மனம் திருப்பி, பரமனிடம் சேர்க்க உறுதியளித்தவரே, நற்கருணைநாதரோடு ஒன்றித்த ஒப்பற்றவரே, செபமாலை பக்தியை சாத்தனை எதிர்க்கும் ஆயுதமாகக் கொண்டவரே, தவத்தை ஏற்று ஏழ்மை, தாழ்ச்சி, பிறரன்புப் புண்ணியங்களில் சிறந்து, இடைவிடா மன்றாட்டால் தீராத நோய்களைக் குணமாக்கும் வரம் பெற்றவள்ளலே, எதிர்காலத்தை முன்னறிவிக்கும் இறைவாக்கினரே, ஐந்து காயங்களிலிருந்து நறுமணம் பரப்பும் நாயகரே, ஒரே நேரத்தில் இரு இடங்களில் தோன்றும் நல்லவரே, இறைவனால் இவ்வுலகுக்கு அருளப்பட்ட மாபெரும் புனிதரான தூய பியோவே, இதோ வேதனைகளோடும், பிரச்சனைகளோடும், தீராத நோய்களோடும், வாழ்க்கை சுமைகளோடும் உம்மை நாடி தேடி வரும் எங்களைக் கண்ணோக்கி பாரும். நாங்கள் விரும்பிக் கேட்கும் மன்றாட்டுக்களை இறைவனிடம் பரிந்து பேசி தயவாய் எமக்கு பெற்றுத் தாரும். அகிலம் போற்றும் அற்புதத் தந்தை புனித பியோவே, இயேசுவின் ஐந்து காயங்களை தனது உடலில் சுமந்து, வேதனைகளை அனுபவித்து துன்பத்தில் இறைவனை உணர்ந்தவரே, நாங்களும் எங்கள் வாழ்க்கையில் வரும் துன்பங்களை ஏற்று புனித வாழ்வு வாழவும், உலகிற்கு அமைதியைக் கொணரவும் தேவையான வரங்களை இறைமகன் இயேசுவிடமிருந்து பெற்றுத்தாரும். – ஆமென்.

**நம்பிடும் மக்கள் அனைவரும் ஒன்றாகும் நிலைவருமே இன்றெழும் புது விந்தைகள்**
**உன்னைப் புகழ்ந்திடுதே இயேசுவே என் தெய்வமே உன் வார்த்தை ஒளிர்ந்திடுதே**



**நம்மால் பேசப்படாத நற்கதைகள்**
**நம்முடையசெயல்களால்**
**பேசப்படட்டும்.**

*புனித அந்தோணியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!*

## புனித பதுவை அந்தோனியார் நாள் (ஜுன் 13)

எங்கள் பாதுகாவலரான தூய அந்தோனியாரே, இறைவனின் அன்புள்ள அடியாரே கிறிஸ்து பாலகனை கையில் ஏந்தும் பேறுபெற்ற தூயவரே, திருமறையை ஆர்வமுடன் போதித்த சிறந்த போதகரே! தப்பறைகளை தகர்த்தெறிந்த வித்தகரே, இறைவனின் தனி அருளால் அலகையை ஓட்டுபவரே, துன்புறுவோரின் துயர் துடைப்பவரே, பாவியராகிய நாங்கள் உமது உதவியை நாடி உம்மிடம் ஓடி வந்தோம். புதுமை வரம் பெற்றிருக்கும் எம் ஞானத்தந்தையே! நம்பிக்கையுடன் உம்மிடம் ஓடி வந்துள்ள உம் பிள்ளைகளின் மனறாட்டுக்களை கேட்டருளும். உமது ஆதரவை நாடி வந்துள்ள உம் அடியார் எம்மீது உம் கருணைக் கண்களைத் திருப்பியருளும். துன்பம், பிணி, வறுமை, சிறுமை ஆகியற்றால் வாடி வந்திருக்கும் எங்களுக்கு உதவியருளும். அழுவோரின் கண்ணீரைத் துடைத்தருளும். நோயாளிகளுக்கு உடல் நலம் கொடுத்தருளும்.

எங்கள் அன்புக்குரிய தூய அந்தோனியாரே! இறைவனின் திருவுளப்படி எப்பொழுதும் நீர் நடந்ததுபோல நாங்களும் இன்பத்திலும் துன்பத்திலும் எப்பொழுதும் அவரது திருவுளத்துக்கு இசைந்து நடக்கவும், நீர் தூய வாழ்வு வாழ்ந்ததுபோல, நாங்களும்ஒருவருக்கும் வஞ்சகம்நினையாமலும், செய்யாமலும் தீமையை அகற்றி புனிதராய் வாழவும், திருச்சபை தளைக்கவும், நாடு செழிக்கவும், நாங்கள் நேர்மையுடன் உழைக்கவும், மக்கள் யாவரும் மெய்யங்கடவுளைக்கண்டறிந்து, தக்க முறையில் அவரை வழிபடவும் எங்களுக்காக இயேசுவை வேண்டியருளும்.

எங்களையும் எங்கள் குடும்பங்களையும், எங்கள் தொழில் முயற்சிகளையும், உழைப்பினையும் ஆசீர்வதித்தருளும். எங்கள் விண்ணப்பங்கள் நிறைவேற எங்களுக்காக இறைவனை மன்றாட வேண்டுகிறோம். – ஆமென்.

**எனக்காக மரித்தாரே என்பாவம் சுமந்தாரே**
**ஒருபோதும் கைவிடார் ஒருநாளும் விலகிடார்**





**இறக்கதான்
பிறந்தோம்
அதுவரை
இரக்கத்தோடு
இருப்போம்.**

புனித அன்னை தெரேசா

## புனித அன்னை தெரேசா நாள்: (செப்டம்பர் 5)

எல்லோரும் பெரிய காரியங்களைச் செய்ய முடியாது. ஆனால் நம்மால் சிறிய காரியங்களை மிகுந்த அன்புடன் செய்ய முடியும். அமைதி ஒரு புன்னகையுடன் துவங்குகிறது. நீங்கள் ஒருவரை மதிப்பீடு செய்யத் தொடங்கினால், அவர்களை நேசிக்க நேரமில்லை. நீங்கள் எங்கு சென்றாலும் அன்பை பரப்புங்கள். மென்மையான வார்த்தைகள் சுருக்கமாகவும் எளிதாகவும் இருக்கலாம், ஆனால் அவற்றின் ஒலிப்பினங்கள் முடிவற்றவை. நாம் எவ்வளவு அளிக்கிறோம் என்பதல்ல, ஆனால் நாம் அளிக்கும்போது எவ்வளவு அன்பை செலுத்துகிறோம் என்பதுதான் முக்கியம்.

**வாழ்வில் இறைவன் துணையானார்
வாடும் எனக்கு உயிரானார்**



## அசிசி பிரான்சிசுவின் செபம்

(புனித பிரான்சிஸ் அசிசி நாள்: அக்டோபர் 4)

இறைவா, என்னை உமது அமைதியின் கருவியாக்கும்; எங்கு பகைமை நிறைந்துள்ளதோ அங்கு அன்பையும் எங்கு கயமை நிறைந்துள்ளதோ அங்கு மன்னிப்பையும் எங்கு ஐயம் நிறைந்துள்ளதோ அங்கு விசுவாசத்தையும் எங்கு அவநம்பிக்கை நிறைந்துள்ளதோ அங்கு நம்பிக்கையையும் எங்கு இருள் சூழ்ந்துள்ளதோ அங்கு ஒளியையும் எங்கு மனக்கவலை உள்ளதோ அங்கு அகமகிழ்வையும் விதைத்திட அருள்புரியும். என் இறைவா, ஆறுதல் பெறுவதைவிட ஆறுதல் அளிக்கவும் புரிந்து கொள்ளப் படுவதைவிட பிறரை புரிந்து கொள்ளவும் அன்பு செய்யப்படுவதைவிட பிறரை அன்பு செய்யவும் வரமருள்வாய். ஏனெனில், கொடுப்பதில் யாம் பெறுவோம்; மன்னிப்பதில் மன்னிக்கப்பெறுவோம்; இறப்பதில் நித்திய வாழ்வடைவோம். ஆமென்.

**தனது இன்னுயிரைப் பலியெனத் தந்தவரே**
**உனக்கு நான் எதையளிப்பேன்? – இன்று**
**உனக்கு நான் எனையளித்தேன்**



## புனித மோனிக்கா அம்மாள் (நாள் ஆகஸ்டு 27)

அன்பான தாயும் பொறுமையுள்ள மனைவியுமான புனித மோனிக்கம்மாளே, உமது வாழ்நாளில் பல துன்ப துயரங்கள் உமது இதயத்தை துளைத்ததெனினும் நீர் விரக்தியடையாமல், விசுவாசம் இழக்காமல், மிகுந்த எதிர்பார்ப்போடும், விடாமுயற்சியோடும், ஆழ்ந்த நம்பிக்கையோடும் உமது கணவருக்காகவும் பாசமிக்க மகனுக்காகவும் தினமும் ஜெபித்தீரே! உமது ஜெபத்திற்கான பலனையும், மகனான புனித அகுஸ்தீனின் மனமாற்றத்தையும் கண்டுணர்ந்தீரே. அதே துணிவையும் பொறுமையும் இறைவன் மீதுள்ள விசுவாசத்தையும் எனக்குவழங்கி அருளும். புனித மோனிக்கா அம்மாளே என் குடும்பத்திற்கான என் விண்ணப்பங்களுக்கு இறைவன் சாதகமாக பதிலளிக்கவும். எல்லாவற்றிலும் அவரது விருப்பத்தை நான் ஏற்றுக்கொள்ளவும் எனக்காக பரிந்து பேசி அருளும். இந்த மன்றாட்டுகளை எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக எனக்கு பெற்றுத்தந்தருளும். ஆமென்

**கண்மணி போல என்னை காப்பவரே**
**உள்ளங்கையில் பொறித்தென்னை நினைப்பவரே**
**நீர் போதும் என் வாழ்விலே - இயேசைய்யா**



**புனித அவிலா தெரசா நாள் (அக்டோபர் 15)**

## ஒரு ஆன்மாவானது ஜெபத்தை விட்டு விலகுவது, அது சாத்தானின் எவ்வித துணையுமின்றி தானாகவே நரகத்தில் விழுவதைப் போன்றது.

– புனித அவிலா தெரசாள் (1515–1582)

### புனித அவிலா தெரசா நாள் (அக்டோபர் 15)

எதையும் எனக்குக்கொடுக்காதீர்கள். ஆண்டவரே, என்னில் இருந்து எதையும் எடுக்காதீர்கள். ஆண்டவரே, நீர் யார், நான் யார் என்று எனக்குத் தெரியும். அதனால் உமக்கு ஏற்றது எதுவோ அதை எனக்குத் தாரும். நீர் யார் நான் யார் என்று உமக்குத்தெரியும். அதனால் எனக்கு எது தேவையோ அதைஎனக்குத்தாரும். நீர் என் அன்பு, நீர் என் எல்லாம். நீர் எனக்குப் போதும். இந்த செபம் மனிதனின் உண்மையான தேவைகள், கடவுளின் உரிமை மற்றும் மனிதனின் தாழ்மையான நிலை ஆகியவற்றைக் குறிக்கிறது. இது ஒருவரிடம் உள்ள ஆசைகள், விருப்பங்கள் மற்றும் தேவைகளைவிட, கடவுளின் சித்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு செபம் ஆகும். அவிலா நகர் தெரசா, இந்த செபம் மூலம் கடவுளுடனான உறவை ஆழமாக்க முடியும் என்று போதித்தார்.

காலங்கள் மாறலாம் கோலங்கள் மாறலாம் காற்றசைய மறக்கலாம் கடலசைய மறக்கலாம்
உன் அன்பு என்றென்றும் மாறாதய்யா உன் நினைவில் நான் என்றும் வாழ்வேனய்யா

# அர்ச். அந்தோனியாரின் புண்ணிய தலங்களில் சொல்லத்தக்க செபம்

இப்புண்ணிய சேத்திரத்தில் மாட்சிமை தங்கிய மேலான சிம்மாசனத்தில் கிருபாசனம் கொண்டு எழுந்தருளியிருக்கிற அர்ச். அந்தோனியாரே! பரிசுத்ததனம் விளங்கும் லீலியே! விலைமதிக்கப்படாத மாணிக்கமே! பரலோக பூலோக காவலே! கஸ்தி துன்பப்படுகிறவர்களுக்குப் பரமசஞ்சீவியானவரே, பாவிகளின் தஞ்சமே! உமது இன்பமான சன்னிதானம் தேடி வந்தோம். உமது திருமுக மண்டலத்தை அண்ணார்ந்து பார்த்து உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம். மகா சிரவணம் பொருந்திய அர்ச். அந்தோனியாரே! சூரத்தனமுள்ள மேய்ப்பரே! பசாசுகளை மிரட்டி ஒட்டுபவரே! திருச்சபையின் கருணையின் கண்ணாடியானவரே! உலகில் எங்கள் ஆதரவும் நீரல்லவோ! எங்கள் சந்தோஷமும் நம்பிக்கையும் பாக்கியமும் நீரல்லவோ! நீர் எங்கள் ஞானத்தந்தை என்பதை எங்களுக்குக் காண்பியும். பிள்ளைகள் செய்த குற்றங்களை தாய்-தந்தை பாராட்டுவார்களோ? உம்மைத் தேடிவந்த நிர்ப்பாக்கியர் பேரில் தயவாயிரும். அழுகிறபேர்களை அரவணையும்.

அல்லல்படுகிறவர்களுக்கு ஆறுதலாக வாரும். நீர் இரங்காவிட்டால் எங்களுக்கு வேறு யார் இரங்குவார்? நீர் ஆதரியாவிட்டால் எங்களை வேறு யார் ஆதரிப்பார்? நீர் நினையாவிட்டால் எங்களை வேறு யார் நினைப்பார்? நீர் உதவாவிட்டால் எங்களுக்கு வேறு யார் உதவுவார்? தஞ்சமென்று ஓடி வந்த அடியோர்கள்பேரில் தயவாயிரும். பரிசுத்த வெண்மையின் துய்யதான தயாபரமே! தயைக் கடலே! தவிப்பவர்களுக்குத் தடாகமே! தனித்தவருக்குத் தஞ்சமே! உமது இன்பமான சன்னிதானம் தேடி வந்தோம். ஆறு, காடுகளைக் கடந்து ஓடி வந்தோம். துன்பம், பிணி, வறுமை முதலிய கேடுகளினாலே வாடி நொந்தோம். எங்கள் நம்பிக்கை வீண் போகுமோ? எங்கள் மன்றாட்டு மறுக்கப்படுமோ? எங்கள் யாத்திரைகள் பலனற்றதாய்ப் போகுமோ? எங்கள் அழுகைக் கண்ணீர் உம்முடைய இருதயத்தை உருக்காது போகுமோ? அப்படி ஆகுமோ? ஐயா, எங்கள் அன்பான தகப்பனே! எங்களை முழுவதும் ஒப்புக்கொடுக்கிறோம். எங்களைக் கையேற்றுக்கொண்டு ஆசீர்வதித்தருளும். ஆமென்.




# வார்த்தையும் வசனமும்

**இயேசுவே என் தெய்வமே உன்வார்த்தை ஒளிர்ந்திடுதே**

# அஞ்சாதே

**1. எசாயா 41:10** அஞ்சாதே, நான் உன்னுடன் இருக்கிறேன்; கலங்காதே, நான் உன் கடவுள், நான் உனக்கு வலிமை அளிப்பேன்; உதவி செய்வேன்; என் நீதியின் வலக்கரத்தால் உன்னைத் தாங்குவேன்.

**2. எசாயா 43:12** அஞ்சாதே, நான் உன்னை மீட்டுக் கொண்டேன்; உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன்; நீ எனக்கு உரியவன்.

**3. யோசுவா 1:9** அஞ்சாதே! கவலைப்படாதே! ஏனெனில், உன் கடவுளும் ஆண்டவருமான நான் நீ செல்லும் இடம் எல்லாம் உன்னோடு இருப்பேன்.

**4. மத்தேயு 10:31** சிட்டுக் குருவிகள் பலவற்றைவிட நீங்கள் மேலானவர்கள். எனவே, அஞ்சாதிருங்கள்.

**5. இணைச்சட்டம் 31:6** நீங்கள் பலங்கொண்டு திடமனதாயிருங்கள், அவர்களுக்குப் பயப்படவும் திகைக்கவும் வேண்டாம்; உன்தேவனாகிய, கர்த்தர்தாமே உன்னோடேகூட வருகிறார்; அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை; உன்னைக் கைவிடுவதும் இல்லை .

**உலகம் முழுவதும் உன்னை வெறுக்கலாம் என்ன நிலைதான் ஆனாலும்**
**எந்தன் அன்பு மாறாது அஞ்சாதே அஞ்சாதே உன்னை நான் காப்பேன்**

# நம்பிக்கை

1. மத்தேயு 19:26 மனிதரால் இது இயலாது. ஆனால், கடவுளால் எல்லாம் இயலும்

2. பிலிப்பியர் 4:13 எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைகொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு. ஏனெனில், கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை என்றார்.

3. லூக்கா 1:37 ஏனெனில், கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை என்றார்.

4. மாற்கு 9:23 நம்புகிறவருக்கு எல்லாம் நிகழும்
5. எசாயா 41: 10
அஞ்சாதே, நான் உன்னுடன் இருக்கிறேன்; கலங்காதே, நான் உன் கடவுள், நான் உனக்கு வலிமை அளிப்பேன்; உதவி செய்வேன்; என் நீதியின் வலக்கரத்தால் உன்னைத் தாங்குவேன்.
துன்பங்கள் சூழலாம் துயரங்கள் வரலாம் உந்தன் கரம்தனில் நான் என்றும் வாழ்ந்திடலாம் கலங்காத உள்ளத்தோடு கர்த்தரை நம்பிடலாம்.

**உலகம் முழுவதும் உன்னை வெறுக்கலாம் என்ன நிலைதான் ஆனாலும் எந்தன் அன்பு மாறாது அஞ்சாதே அஞ்சாதே உன்னை நான் காப்பேன்**

# கிருபை

**1. 2 கொரிந்தியர் 12:9**

என் கிருபை உனக்குப் போதும்

**2. ஏசாயா : 54:10**

என் கிருபை உன்னைவிட்டு விலகாமல் இருக்கும்

**3. சங்கீதம் 117:2**

அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது, கர்த்தரின் உண்மை என்றென்றைக்குமுள்ளது என்பதாகும்.

**4. யோவான் 1:16**

அவர் நிறைவிலிருந்து அனைவரும் கிருபையின் மேல் கிருபையாகபெற்றோம்.

**5. சங்கீதம் 94:18**

கர்த்தாவே உமது கிருபை என்னைத் தாங்குகிறது.

நான் இல்ல என் பலம் இல்ல
என் தாலந்து இல்ல எல்லாம் கிருபை

# கடவுளின் அன்பு

**1. யோவான் 3:16**

தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்.

**2. ஏசாயா : 54:10**

மலைகள் நிலை சாயினும் குன்றுகள் இடம் பெயரினும் உன்மீது நான் கொண்ட பேரன்போ நிலை சாயாது.

**3. 1யோவான் 4:19**

அவரே முதலில் நம்மிடம் அன்பு செலுத்தியதால் நாமும் அன்பு செலுத்துகிறோம்.

**4. யோவான் 15:13**

தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை.

**5. 1கொரிந்தியர் 13:13**

ஆக, நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகிய மூன்றுமே நிலையாய் உள்ளன.

**தேடிவந்த தெய்வம் இயேசு – என்னைதேடி வந்த தெய்வம் இயேசு**
**வாடி நின்ற என்னையே வாழவைத்திடதேடி வந்த தெய்வம் இயேசு**

# நம்பிக்கை

**1. மத்தேயு 19:26**

மனிதரால் இது இயலாது. ஆனால், கடவுளால் எல்லாம் இயலும்

**2. பிலிப்பியர் 4:13**

எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைகொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு.

**3. லூக்கா 1:37**

ஏனெனில், கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை என்றார்.

**4. மாற்கு 9:23**

நம்புகிறவருக்கு எல்லாம் நிகழும்

**5. எசாயா 41:10**

அஞ்சாதே,நான் உன்னுடன் இருக்கிறேன்;
கலங்காதே, நான் உன் கடவுள்,
நான் உனக்கு வலிமை அளிப்பேன்;
உதவி செய்வேன்;
என் நீதியின் வலக்கரத்தால்
உன்னைத் தாங்குவேன்.

**துன்பங்கள் சூழலாம் துயரங்கள் வரலாம்**
**உந்தன் கரம்தனில் நான் என்றும் வாழ்ந்திடலாம்**
**கலங்காத உள்ளத்தோடு கர்த்தரை நம்பிடலாம்**

# கார்மேல் அன்னையின் ஜெபம்

கார்மேல் தாயே! இரக்கத்தின் அரசியே வாழ்க! நம்பி வந்த அனைவருக்கும் நாடும் வரம் அளித்து ஆறுதல் அளிப்பவளே வாழ்க! மனித குலம் வாழ இடையறாது திருமகனிடம் பரிந்துபேசும் பாசமுள்ளதாயே வாழ்க! துன்பத்திலும் துயரத்திலும், வேதனையிலும் சோதனையிலும் துவண்டுபோன எங்கள் எல்லோருக்கும் வேண்டும் வரம்அருளும். அருள்நிறைந்த மரியே வாழ்க! கர்த்தர் இவ்வுலகில் எல்லாத் தேவைகளிலும் (**தங்கள் தேவைகளை மௌனமாக எடுத்து சொல்லவும்**) உம்திருமுகம் நோக்கி கரம் விரித்து ஓயாது மன்றாடும் எங்களை பரிவோடு பாரும் அம்மா! கானாவூர் திருமணத்தில் குறைபோக்கி நிறைவளித்த தாயே! எங்கள் ஒவ்வொருவரின் விண்ணப்பமும் வெவ்வேறு வடிவமானவை. மனம் கசிந்து வாடுகின்ற எங்கள் குறைகள் தீரவும், உம் திருமகனிடம் பரிந்துரையும் அம்மா, உம்திருமகன் திருவுளப்படி நாங்கள் வாழவும், எம் வாழ்வில் நலம் சூழவும், தயையும் கிருபையும் பெற்று தரும்படி உம்மை பணிவுடன் வேண்டுகிறோம். ஆமென்.

**கண்மூடி இரவில் நான் தூங்கும் போது**
**கண்ணான இயேசு எனைக் காக்கின்றாய் - உன்னை**
**எண்ணாத என்னை எந்நாளும் எண்ணி மண்மீது வாழ வழி செய்கின்றாய்**

# உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருக்கின்ற ஆத்மாக்களுக்காக ஜெபம்

திவ்விய சேசுவே, உத்தரிக்கிற ஸ்தலத்தின் ஆத்துமங்கள் பேரில் இரக்கமாயிரும். தாவீது அரசனின் புத்திரனாகிய சேசுவே! சிலுவைப் பார்த்தால் அதிகரித்த உமது திருக்காயங்களின் கொடிய வேதனைகளைக்பார்த்து, உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமங்கள் பேரில் இரக்கமாயிரும். சுவாமி, தேவரீர் அன்று சிலுவையைப்பீடத்தில் பலியாகும்போது பச்சாதாபக் கள்ளனுக்கு கிருபை புரிந்ததுபோல, இந்த ஆத்துமங்களின் பேரில் இரக்கமாயிருந்து, அவர்களை உமது பிரத்தியட்ச தரிசனையின் பாக்கியத்தில் சேர்த்தருளும். அங்கே சகல அர்ச்சிஷ்டவர்களோடேயும், சம்மனசுக்களோடேயும் அவர்கள் சதாகாலமும் தேவரை வாழ்த்தி ஸ்துதித்துக் கொண்டிருப்பார்களாக. ஆமென்.

உன்னதத்தில் வீற்றிருக்கிற பிதாவே! உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப்படும் ஆத்துமங்களுக்காக திவ்யசேசுக்கிறீஸ்துவின் விலைமதியாத திரு இரத்தத்தை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். சுவாமி! பரிசுத்தரே, சர்வவல்லப பரிசுத்தரே, அட்சயரான பரிசுத்தரே, சுவாமி! எங்கள் மேல் இரக்கமாயிரும். பாவிகளுக்குப் பொறுத்தலை தந்தருளும். மரித்த சகல விசுவாசிகளுக்கும் நிந்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும். ஆமென்.

சகல விசுவாசிகளுடைய சிருஷ்டிகரும், இரட்சகருமாகிய சர்வேசுரா, மரித்த உமது அடியார்களுக்குச் செய்யப்படுகிற பக்தியுள்ள மன்றாட்டுக்களை அங்கீகரித்து, அவர்கள் மிகுந்தஆவலோடே ஆசிக்கிற பாவமன்னிப்பைக் கிருபை செய்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். சதாகாலமும் சீவியரான சர்வேசுரா, இந்த மன்றாட்டைத் தயவோடே கேட்டருளும் சுவாமி.

நித்திய பிதாவே! பெற்றோர் பந்துக்கள், சிநேகிதர், உபகாரிகள் முதலியவர்களைத் தக்கவிதமாய் நேசித்து அவர்களுக்கு வேண்டிய நன்மை செய்ய கற்பித்தருளினீரே. ஆகையால் எங்களை பெற்று அன்போடு வளர்த்து ஆதரித்தவர்களும், பற்பல உபகாரம் எங்களுக்கு செய்தவர்களும், எங்கள் பந்துக்கள், சிநேகிதர் முதலானவர்களும் வேதனை நீங்கி நித்திய காலம் உம்மைச் சந்தோஷமாய்த் தரிசித்துக் கொண்டிருக்கத் தேவரீர் கிருபை செய்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.

மு :– மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக் கொள்வோமாக.

து:– நித்திய இளைப்பாற்றியை அவர்களுக்கு தந்தருளும் சுவாமி. முடிவில்லாத பிரகாசம் அவர்களுக்குப் பிரகாசிக்கக் கடவது.

(கிருபை தயாபத்து மந்திரம் சொல்லவும்)

**நின் ஒளி அவர்மேல் ஒளிர்ந்திடுக புவியில் நிதம் அவர் நினைவு நிலைத்திடுக**
**தீயவை யாவும் விலகிடுக...2 அவர் தினம் உம் மகிழ்வில் நிலைத்திடுக**

# புனித மரிய ஜெர்த்ருத் உத்தரிகிற ஸ்தலத்தில் அவதியுறும் ஆன்மாக்களின் பாதுகாவலியாக கொண்டாடப்படுகிறார்

கல்லறைக்குச் சென்று இறந்த நம் ஆன்மாக்களுக்காக, மூதாதையர்களுக்காக ஜெபிக்கும் பழக்கமும், மரபும் நம் கத்தோலிக்கர்களிடையே நிலவுகிறது. அம்மரபை ஆழமாக நேசிக்கிற பல விசுவாசிகள் கல்லறை தினம் அன்றும், நவம்பர் மாதத்தில் ஒரு சில நாட்களை தேர்ந்தெடுத்து கல்லறை தோட்டத்திற்கு சென்று ஜெபிக்கிறார்கள்.

அவ்வாறு ஜெபிக்கும் விசுவாசிகள் புனித மரிய ஜெர்த்ருத் கற்று கொடுத்த ஆன்மாக்களை விடுவிக்கும் ஜெபத்தை ஜெபிக்கிறார்கள். திருகாட்சியாளராக விளங்கிய அவருக்கு, இயேசு வெளிப்படுத்திய உண்மையின் வழியாக ஆன்மாக்களை விடுவிக்கும் ஜெபத்தை ஒவ்வொரு முறை ஜெபிக்கும்போதும் ஆயிரம் ஆன்மாக்கள் உத்தரிக்கிற நிலையிலிருந்து விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்ற வாக்குறுதியை நம் ஆண்டவர் இயேசு புனிதைக்கு அருளினார். நாமும் வலிமைமிக்க ஜெபத்தை சொல்லி ஆயிரம் உத்தரிக்கஸ்தல ஆன்மாக்களை விண்ணகத்திற்கு கொண்டு போய் சேர்ப்போம்.

**ஜெபம்:** நித்திய தந்தையே, உம்முடைய தெய்வீக திருமகனின் விலைமதிக்க முடியாதிருரத்தத்தை உலகெங்கிலும் நிறைவேற்றப்படும் திருப்பலியோடு சேர்த்து உத்தரிக்கிற நிலையிலுள்ள ஆன்மாக்களுக்கும், உலகெங்கிலும் வாழ்கிற பாவிகள் எங்களுடைய குடும்பத்திலும், இல்லத்திலும் பாவத்தோடு மரித்த ஆன்மாக்கள் ஆகியோரின் ஆன்ம ஈடேற்றத்துக்காகவும் ஒப்புக்கொடுக்கிறேன். ஆமென்

அகால வேளையிலே அம்மா உன் கருணையாலே
பொல்லாத ஊழியின் தொல்லைகள் நீங்கிட வல்ல உன் மகனிடம் கேள்

# மரித்தோர் பாடல்

## தாயே உத்தரிக்கும் ஸ்தலத்தோருக்கு

தாயே உத்திரிக்கும் ஸ்தலத்தோருக்கு
ஓயாத் தஞ்சமும் ஆதரவும் நீயே – 2
தீயில் மெலிந்து வெந்து சோர்ந்து – உந்தன்
திருத்தயை கேட்க நீயோ அறிந்து (2)
தூய வான் துதியினில் சேர்ந்து
உம்மை துதித்திட அருள் செய்வாய் புரிந்து – 2
உலகப் பிசாசை தினம் வென்றார் – தங்கள்
உடலுக்கு ஓயாதெதிர் நின்றார் (2)
கலகமெல்லாம் கடந்த பின்னும்
சொற்பக் கறையினால் துறை சேரார் இன்னும் – 2
தாய் விட்டுப் பிள்ளை நிற்கலாமோ
உந்தன் தயைவிட்டால் துயர் விட்டு போமோ (2)
தூய கருணை நிறைதாயே
இவர் துயர் எல்லாம் நீங்க வருவாயே – 2

பழியினை சுமந்து உலகினில் பிறந்து ஒளியினை ஏற்றிய அகல் விளக்கே
இருள்திரை அகற்றி அருள்வழி காட்டி வானக வாழ்வை அளிப்பாயே!

# மரித்தோர் பாடல்

## உம்மை அல்லாமல் எனக்கு யாருண்டு

உம்மை அல்லாமல் எனக்கு யார் உண்டு
உம்மை அல்லாமல் எனக்கு யார் உண்டு
உம்மை அல்லாமல் எனக்கு யார் உண்டு
உம்மை அல்லாமல் எனக்கு யார் உண்டு

என் இயேசையா அல்லேலூயா
என் இயேசையா அல்லேலூயா
என் இயேசையா அல்லேலூயா
என் இயேசையா அல்லேலூயா

1. இன்பத்திலும் நீரே துன்பத்திலும் நீரே
இன்பத்திலும் நீரே துன்பத்திலும் நீரே
எவ்வேளையும் ஐயா நீர்தானே
எவ்வேளையும் ஐயா நீர்தானே

உம்மை அல்லாமல் எனக்கு யார் உண்டு
உம்மை அல்லாமல் எனக்கு யார் உண்டு

**மரணம் வருவதை மனிதன் அறிவானோ**
**தருணம் இதுவென இறைவன் அழைப்பானோ**
**இறைவன் இயேசுவோ இறப்பைக் கடந்தவர்**
**அவரில் வாழ்பவன் இறந்தும் வாழ்கிறான்**

# இரங்கல் செய்திகள்

## ஜெயசீலி சித்தி

என் மனதில் நீங்கள்எப்படி என்று...
எதை சொல்வேன்? ,
எப்படி சொல்வேன் ,
என்னவென்று சொல்வேன்?
புதுவை பெற்றோருக்கு மகளாக,
உடன் பிறப்புகளின் சகோதரியாக,
அன்பு சித்தப்பாவிற்கு (துணைவியாக) காதல் தேவதையாக,
மூன்று முத்துக்களின் தாயாக,
உறவுகளின் பாலமாக,
மகளிர் இயக்கங்களின் தூணாக,
ஆலோசனை தருவதில் சரியாக,
உதவுவதில் தாராளமாக,
புதிய திருமண பந்தங்களின் நம்பிக்கையாக,
இறை ஊழியர்கள் மேல் அக்கறையாக,
தேவ காரியங்களில் பங்கெடுப்பதில் மிக ஈடுபாடாக,
ஜெபிப்பதில் பக்தியாக,
அன்னை மரியின் பக்தையாக,
இறை ஏசுவின் பிள்ளையாக,
சித்தி,
நான் நம்புகிறேன்
அவரோடு இன்று வான்வீட்டில் இருக்கின்றாய் மகிழ்ச்சியாக

இன்றும் அங்கு ஜெபிப்பீர்கள் எங்களுக்காக

இங்கு நாங்கள் ஆன்ம இளைப்பாற்றிற்காக
வேண்டிக்கொள்கிறோம் உங்களுக்காக...

அன்புடன்...
**EDDIE, JULIA, JACK, JONAH**

# எங்கள் மனதில் ஜெயசீலி

அன்போடு அறிவும் கொண்ட அனுபவ சீலி
அன்னைக்கு பிடித்தமான அற்புத சீலி
ஆர்வமும் ஆற்றலும் கொண்ட ஆக்க சீலி
ஆண்டவனை கைக்குள் வைத்தஆசை சீலி
இன்முகத்தை மட்டுமே இறுதிவரை தந்து
இறையடி சேர்ந்த இனிய சீலி
ஈசனுக்கு ஈதல் என்பதை ஈடுபாட்டுடன் செய்த
ஈடில்லா ஈஸ்வரி எங்கள் சீலி
உழைப்பு ஒன்றையே ஊன்றுகோலாய் கொண்டு
உறவுக்கு உயிர் கொடுத்த உன்னத சீலி
எட்டுத்திக்கும் எவர்வரினும் எம்மவர் என்ற
எண்ணமுடன் எல்லோரையும் அரவணைத்த எழுச்சி சீலி
ஏற்றமுடன் நாம் வாழ எங்கேயும் ஏறிச்செல்ல
ஏணியாய் தனை தந்த ஏற்ற சீலி
ஒற்றை ஓவியமாய் ஓயாத காவியமாய்
ஓசையின்றி ஒவ்வொருவரும் முனுமுனுக்கும்
ஒரே சொல்
ஜெயசீலி! ஜெயசீலி! ஜெயசீலி.

**R. ஜேசுதாஸ் ராஜத்தி**
குடும்பத்தினர்
திருச்சி.

# In Loving Memory of My Dear Sister Jeyaseeli

Time passes by so quickly, and it’s hard to believe that a whole year has gone by since we lost you. Though you're no longer here with us in person, your love and warmth continue to echo in our hearts every day.

You were like a sister to Mom and Dad—always checking in, praying for us, and showing such deep care for everyone. You were a loving aunt to us kids - The heart of a home that welcomed us with open arms, making it feel like a second home whenever we visited. Despite challenges with your health, you continued to extend that love and warmth to our kids as a loving grand aunt.

Your unwavering dedication to serving in the church, your kindness, your laughter, and your natural way of making everyone feel seen and loved— we will never forget.

Though you're gone, your spirit lives on in the love we share as a family and the beautiful memories you've left behind.

May your legacy of generosity, compassion, and togetherness live on in the generations to come.

We miss you dearly. You will always be in our hearts.

❤ Augustine and Rani Sidd, Rammia, Josanne, Eliya and Jayden Denzil, Renu, Joshua, Jeremy and Jordan
DUBAI

**A Prayer**

Psalm 116:15 (NIV)"Precious in the sight of the Lord is the death of his faithful servants.
"Dear Lord,We thank You for the life of our beloved Jeyaseeli Chitti - a woman whose heart overflowed with love, kindness, and faith. May the goodness of her life inspire those of us who are still here to carry forward her spirit in the way we love, serve, and support one another.
We know she was precious in your eyes, and that we will see her when we come home to You. Amen

# TRIBUTE TO JEYASEELI ATHAI

***Dear Jeyaseeli Athai,***

Feeling deeply grateful for this opportunity to write about you. You lived a life so full of love, generosity, and joy. You were truly an outgoing soul, always ready to share a smile, a helping hand, and a word of encouragement. Your generous heart knew no boundaries. You had a gift for lifting the spirits of those around you, with your humor, kindness, and your unwavering faith in God.

You always loved helping others….reaching out to those in need, comforting the hurting, and praying without ceasing. Even in your last year, when pain and agony became your constant companions, you never stopped praying. Your faith stood as a beacon for all of us, reminding us to trust God no matter the season.

You meant so much to our family. At times when we were in need, you stood by us with prayers and encouragement. We miss you more than words can say. Amma loves you deeply, and so do Leeba and Lisy. We will forever hold close the joyful memories of 2010, when you and Mama stayed with us for a week in Portland….a time filled with laughter, conversations, and warmth that will never fade from our hearts.

Though you are no longer with us in person, you remain in our thoughts, in our prayers, and in the love we share as a family. We thank God for the gift of your life and the blessing you were to so many.

*With love and prayers for your soul,*
Dhanaseeli Athachi, Leena, Leeba, and Lisy.
USA

மலர் போல முகமெடுத்து
பெண்ணாக நீ பிறந்தாய்
எங்களோடு கரம் பிடித்து
தெய்வ வழியில் நடத்தி வந்தாய்
உறவுகளை இணைத்துக் கொண்டு
ஒற்றுமைக்கு வழி வகுத்தாய்
விளக்காக நீ இருந்து வெளிச்சம் தந்தாய்
சொல்லாமல் விடைபெற்று
இறைவனிடம் தஞ்சம் அடைந்தாய்
மறக்காமல் நினைத்திருப்போம்
மறுபடியும் வருவாயா?விண்நோக்கிப் பார்த்திருப்போம்
எங்களை அடையாளம் காண்பாயா?
மின்னும் விண்மீனில் நீ எந்த நட்சத்திரம்?
என்றைக்கும் நீ எங்கள்அழகான முத்துச் சரம்!

**லில்லி, லாரன்ஸ்**
**விஜித்தா, ரித்திகா**
**கனிக்கா**

**அன்பு அண்ணி!**

கவிதா திருமண புடவை வாங்க வந்திருந்தபோது அண்ணி எங்களை கவனித்த விதம் மறக்கமுடியாது ! முடியாவிட்டாலும் சின்ன get together-க்கு ஏற்பாடு செய்து எல்லாரும் உடன் dance ஆடி சந்தோஷமாக இருந்ததை மறக்க முடியாது! அரசிக்கு பெரிய opération நடந்தபோது அவர்கள் செய்த செபம் மறக்க முடியாது! கவிதா கோவில் திருமணத்தில் பிரதீப் தாலி கட்டும்போது நான் vidéo call-ல் கூப்பிட்டபோது கண்டு மகிழ்ந்து ஆனந்தகண்ணீர் விட்டதை மறக்கமுடியுமா! இன்னும் பல பல மறக்கமுடியாதவைகள்!!!!! என்றும் எங்களுடன்!!!

Perriemma always made us feel very loved and welcomed. Even though we live far when we met it is like we were never apart. She cared for us like her own daughters and her love was rare and powerful.

Her powerful faith in God is a daily source of inspiration in our lives.We love you forever Perriemma!

LOVE YOU Anbou Anni! Akka! perimma! Athai! Ammachi

ABI & Family
France

# I HAVE FOUGHT THE GOOD FIGHT

I have fought the good fight, I have finished the race, I have kept the faith. 2 (TIMOTHY 4:7)

**To my Dearest JAYASEELI**

I Thank God that I had you as my sister. Though you were younger to me, you proved yourself as a big sister in taking up the responsibilities for our family.

We were far away from each other but very close in our hearts. I feel so sorry and sad for all those moments that I couldn't spend with you in life.

I will treasure the conversations and sharing of our personal life journey through phone calls.

I was always amazed by your faith in our God the Father, Son and the Holy Spirit. I always appreciated your devotion for our Blessed Mother Mary.

You were so creative in writing Songs and singing praise to our Blessed Mother. Great was your tireless service to the Church and the people around you.

Your words and actions would have comforted many people and of a great help for their spiritual and family life.

You have inspired many friends and well wishers through your continued prayers and comforting words.

I pray that your faith would carried on to your husband, daughters, son, siblings, relatives and friends.

Sorry, dear Jayaseeli that I was not with your when you were down in your sickness. PHILIPPIANS 1:23

I want very much to leave this life and be with Christ, which is a far better thing.

You spoke to me on the day before you could attain your eternal rest.I felt so disappointed and terribly sad.

GOD was so merciful towards you that HE didn't want you to suffer anymore.1 THESSALONIANS 4:14

We believe that JESUS died and rose again, and so we believe that GOD will take back with JESUS who have died believing in HIM.

With so much of sorrow in my heart, May your Soul Rest in Peace in CHRIST. You will be always remembered.

*Your loving sister,*
PREMA THAMBURAJ, Malaysia

# விண்ணுக்கும் மண்ணுக்கும் பாலமாய்...

விண்ணுக்கும் மண்ணுக்கும் பாலமாய் இருப்போர் சிலர், விண்ணுக்குரிய அனுபவங்களை நம்மை அனுபவிக்க வைப்பவர் சிலர், விண்ணுக்குரிய வழிகளை வாழ்ந்து வழிகாட்டியோர் ஒரு சிலர், எங்களுக்குத் தெரிந்த அந்த ஒரு சிலர் – செல்வனின் அண்ணி, ராணியின் அக்கா, வின்னியின் ஞானத் தாய், மெர்லியின் பெரியம்மா, எங்கள் பிள்ளைகளின் மிட்டாய் தரும் பாட்டி.பேருக்குரிய பெருமையுடன் பேறு பெற்ற நீவிர் இறைவனை முகமுகமாய் தரிசிக்கும் இந்நேரத்தில். உம் இறைப்பற்று, உம் சுறுசுறுப்பு, உம் கலகலப்பு, உம் முகப்பொலிவு, உம் முன்னெடுப்பு, உம் ஈடுபாடு, உம் ஒன்றுப்படுத்தும் தன்மை – இவை அனைத்தும் எங்களுக்கு வாழ்வளித்து, வழிகாட்டிய நினைவுகளை எண்ணி நன்றியுடன் வாழ்வாக்கி வரும் உறவுகளின் வணக்கங்கள்.

SELVAN, RANI FLY, VINNI FLY, MERLI FLY

# அன்பு அண்ணி...

அன்பு அண்ணி...
உங்களை மறக்க மனம் உண்டோ
இப்போது நீங்கள் இல்லை என்றாலும்,
நீங்கள் எங்கள் இதயங்களில் உயிராய் வாழ்கிறீர்கள்.
ஆசையாய் சிரித்து பேசும் முகம் அவ்வளவு எளிதில் மறந்து போகுமா?
நீங்கள் எனக்கு செய்த உதவிகள்,
என் வாழ்க்கையில் எப்படி மறக்க முடியும்?
முதல்முறையாக சென்னை வந்த நான்
டைப்பிங் கிளாஸ் போகவே பயந்தேன் அப்போது
துணையாக  என்னுடன் வந்து எனக்கு தைரியம் கொடுத்த
அந்த  நாட்களை மறக்க முடியுமோ?
18 வயதில், சமையலுக்கான முதல் பயிற்சி, கொடுத்த ஆசிரியர் நீங்கள்தான்.
ஹாஸ்டலில் இருந்த போது,
ஒவ்வொரு புதன்கிழமையும் கும்பகோணம்கோவிலில் சந்திப்போம்.
அங்கே யாருக்கும் தெரியாமல்,
என் மடியில் வீட்டு ஸ்நாக்ஸ் வைக்க
உங்களுக்கே மட்டும் தெரிந்த அந்த பாசம்!
உங்கள் வீடு என் தாய் வீடு போல உணர்வு கொடுத்தது,
அந்த அரவணைப்பு, அந்த அன்பு...
எங்களுக்கே உரித்தான அழகு நினைவுகள்.

**ஸ்கொலா சார்லஸ் குடும்பத்தினர்**

# அன்பு அத்தை...

நான் மனதில் நினைத்ததை நீங்கள் என் பிறந்தநாள் பரிசாக அளித்தீர்கள்,
அது என் வாழ்நாளில் மறக்க முடியாத பொக்கிஷம்...
பரிசாக அல்ல பாசமாக இருந்தது.
உங்கள் அன்பு இந்த உலகத்தில் காணவே முடியாது,
அது சாமானியம் அல்ல – தெய்வீகம்!
அவதார் 3D படம் பார்க்கும்போது நீங்கள் கத்தினது
இன்னும் நினைவில் இருக்கு, அந்த சிரிப்பு, அந்த சந்தோஷம்
என் மனதில் இன்னும் வாழ்கின்றன.
இரவு நேர சின்ன சின்ன இசைகள்,
பழைய நினைவுகளை பகிர்ந்த அந்த நேரங்கள்
அந்த நாட்கள் சொர்க்கம் போல இருந்தது.
நான் அலுவலகம் செல்லும் நேரத்தில் நேரம் ஆகிவிட்டது என
நான் ஓடினாலும், வீட்டின் வாசல் வரை, சோற்றுத்தட்டுடன்
ஓடி வந்து இதை மட்டும் சாப்பிட்டுப் போ என்று ஊட்டி அனுப்பினீர்கள்.
அது சாதாரணமல்ல, அது அன்னை மாதிரியான பாசம்.
அதை நான் வாழ்நாளில் மறக்கவே முடியாது.
எனக்கே அல்லாமல் என் பிரண்ட்ஸ்க்கும் அடிக்கடி ஸ்னாக்ஸ் கொடுப்பீர்கள்.
அவர்கள் வரை பசிக்காமல் பார்த்தது நீங்கள்தான்.
உங்கள் அத்தை ரொம்ப பாசமா இருக்காங்க! என்ற அந்த வார்த்தைகள்
இன்னும் காதில் ஒலிக்கின்றன.
அத்தை உங்களைப் பற்றி எழுத ஆரம்பித்தாலே பக்கங்கள் போதாது
உங்களை பற்றி பேச.... நினைவுகள் கடல் போல உண்டு
அவை எல்லாம் வார்த்தைகளில் அடங்காது.
உங்களின் பாசத்தால் எங்கள் பிள்ளைகளின் மனதில்
நீங்கா இடம் பெற்றுள்ளீர்கள்...
என் பிள்ளைகள் அடிக்கடி கேட்கும் ஒரு கேள்வி ஜெயசீலி அம்மாச்சி
எங்கே!?? நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்றால் ??
எங்கள் நினைவுகளிலும்... எங்கள் இதயத்தின் நடுவிலும் ....
எங்கள் நெஞ்சில் வாழ்கிறீர்கள்.

**என்றும் எப்போதும்**

JOHN JERRY AND FAMILY ❤

# உயிர்த்த ஆண்டவரோடு அக்கா ஜெயசீலி

உயிர்த்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஜெயசீலரால் பாஸ்கா திருநாளில் உருவாக்கப்பட்ட ஜெயசீலி அக்காவே! அன்பையும், ஜெபத்தையும், மன உறுதியையும் கொண்டவரே, மற்றவர்கள் அனைவருக்கும் உங்கள் சிறந்த யோசனைகளையும் நம்பிக்கையும், விசுவாசத்தையும் கொடுத்து, எல்லாரும் அன்னை வழியில் நடக்க அந்த பாத்திமா அன்னையை வணங்கி, வாழ்த்தி, பாட்டு பாடி, அறிவுரை கூறி எல்லோருக்கும் உதவி புரிந்தீரே.

உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரையும் நேசித்தவளே, கடந்த 49 வருடமாக அன்பு டேவிட் அத்தானோடு கரம் பிடித்து அவர்களின் அன்பு துணையாகவும், உங்கள் மூன்று செல்வங்கள் டோனி, அக்ஸி மோனி அவர்களுக்கு அன்பு தாயாகவும் இருந்து அவர்களை அன்பு பாதையில் வளர்த்து அவர்களுக்கு நல்ல விதமாக வழிகாட்டியாக, அன்பான மூன்று பேரக் குழந்தைகளுக்கு அன்பு பாட்டியாக இருந்தீரே.

உங்கள் அன்பு தம்பி ராஜு என்னையும் எனது குடும்பத்தையும் நினைத்து போன் செய்து விசாரித்து, நாங்கள் ஊருக்கு வரும்போது எங்களுடன் தங்கி இருந்து, காத்து, வேண்டிய வசதிகளை செய்து கொடுத்தவரே. உங்கள் உதவியால் எத்தனையோ திருமணங்கள் ஏற்பாடு செய்து அவர்களுக்கு நல்ல விதமாக வாழ்க்கை அமைத்து கொடுத்து ஆசீர் பெற்றவளே.

உங்கள் உறவும் எண்ணங்களும் மேன்மையானவை.எங்கள் அனைவரையும் பரிதவிக்கவிட்டு பாத்திமா அன்னையிடம் இணைந்துவிட்டீர் என்றாலும் எங்களுக்கு எப்போதும் நீங்கள் ஒரு நல்ல கார்டியன் ஏஞ்சலாக (Guardian Angel) இருக்கின்றீர்.

உங்கள் ஆன்மா தேவனின் பேரின்ப ராஜ்ஜியத்தில் நித்திய இளைப்பாற்றி அடைய வேண்டுகிறோம்.

**உங்களை பிரிந்து வாடும்**
தம்பி **ராஜு** குடும்பத்தினர்
FRANCE

# ஆண்டவரோடு இணைந்த நிலையில்...

ஆண்டவரோடு இணைந்த நிலையில் இறப்போர் பேறு பெற்றோர். அதற்கு தூய ஆவியார், ஆம் அவர்கள் தம் உழைப்பிலிருந்து ஓய்வு பெறுவார்கள். ஏனெனில் அவர்கள் செயல்கள் அவர்களைப் பின் தொடரும் என்று கூறினார். திரு. வெளி 14:13.

## என் அருமை நாத்தனார் ஜெயசீலி

அன்பே உருவானவர். அனைவரையும் அன்பினால் கவர்ந்தவர். அன்பினால் எல்லோருக்கும் எல்லோருமாய் இருப்பவர். குடும்பத்தலைவியாக, கணவருக்கு ஏற்ற மனைவியாக பிள்ளைகளுக்கு ஒரு எடுத்துக்காட்டிய தாயாக, பேரக்குழந்தைகளுக்கு ஒரு பாசமிகு அம்மாச்சியாக வாழ்ந்து காட்டியவர். இரு குடும்ப உறவுகள் அனைவரையும் கூட்டி சேர்த்து அரவணைப்பவர். குடும்ப உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர். தாம்பரம் பாத்திமா அன்னை ஆலயத்தில் ஜெபக்குழுவின் தலைவியாக இருந்து, பங்கிற்கு எல்லா ஜெபக்காரியங்களிலும் முன்னோடியாக இருந்து செய்து காட்டியவர். அன்பியத் தலைவியாக செயல்பட்டு அன்பியத்தின் எல்லாக் காரியங்களிலும் ஜெப வழிபாட்டிலும் அவர்களின் தேவைகளிலும் ஆலோசனைக் கொடுத்து உதவி செய்து ஒரு நல்ல வழி காட்டியாக நின்று அன்பிய மக்களை ஒருங்கிணைத்து சாதனை படைத்தவர்.

பெண்கள் பணிக்குழுவின் தலைவியாக நின்று ஒரு நல்ல சமூக சேவை செய்பவராக நின்று எத்தனையோ பெண்களுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தை செயல்படுத்தி அவர்கள் தன்னம்பிக்கையுடன் வாழ வழி வகுத்து காட்டியவர். திருமண தகவல் மையத்தை வெற்றிகரமாக நடத்தி எத்தனையோ பிள்ளைகளுக்கு வாழ்வளித்து வாழ்வில் விளக்கேற்றி வைத்து சாதனைப் படைத்தவர். உதவி என்று யார் கேட்டாலும் உதவிக்கரம் நீட்டுபவர். இறை வார்த்தையின் மீது அளவில்லா ஆர்வம் கொண்டவர். மிகுந்த தெய்வபக்தி கொண்டவர். தேவ அன்னையின் மீது அளவில்லா அன்பு வைத்து 1000 அன்னை மரியின் போற்றுதல் இயற்றி பாடி மகிழ்ந்து புத்தகம் வெளியிட்டவர். நற்கருணை ஆராதனை புத்தகம் மற்றும் நிறைய புத்தகங்கள் எழுதியவர்.

நானும் ஜெயசீலியும் தோழியாகவும் உடன் பிறப்புப் போலவும் அன்புடன் இருந்தோம். தினமும் இரவு படுக்குமுன் நானும் ஜெயசீலியும் ஆண்டவரைப்பற்றியும் இறைவார்த்தைப் பற்றியும்தான் அதிக நேரம் பேசிக்கொண்டு இருப்போம். ஜெயசீலியின் அந்த அன்புக்குரலை கேட்க முடியாமல் ஒரு வருடமாக வேதனையோடு தவித்துக்கொண்டு இருக்கிறேன். ஜெயசீலியின் ஆன்மா நித்திய இளைப்பாற்றி அடைய தினமும் செபிக்கின்றேன். இப்போது ஜெயசீலி ஆண்டவரின் கையில் அழகிய மணிமுடியாகத் திகழ்ந்து ஒளி வீசிக்கொண்டு இருப்பார். **இயேசுவுக்கே புகழ், இயேசுவுக்கே நன்றி, மரியே வாழ்க.**

**அன்பு அண்ணி**
**RUBY JEGANATHAN**

# உறவை நாடி...

உறவை நாடி அருமை சித்தி
சித்தி சித்தி என உங்களை நான்
சுத்தி சுத்தி வந்த நாட்களை எண்ணிப் பார்க்கிறேன்
பக்தி நிறை மாதா பாடல்கள் பல பாடி
சக்தி நிறைந்த இறை வார்த்தைகளை தினமும் அனுப்பி
புத்தி மதியோடு ஆலோசனைகள் பல தந்து
வற்றிப் போகாத நீரூற்று போன்ற அன்பை காட்டிய தாயே
ஏழு பத்து ஆண்டுகள் உறவைநாடி என்ற யுக்தியைக் கையாண்டு
நிறைவான வாழ்வு வாழ்ந்து விட்டு
ஏத்திப் புகழ இறைவனடி சேர்ந்து விட்ட அருமை சித்தியே
இத்தனை அழகான உறவைத் தந்த
இறைவனை நானும் ஏற்றிப் புகழ்கிறேன்.

**SHEELA JAMES**

# In Loving Memory of My Dear Sister Jeyaseeli

On this first anniversary of my beloved sister Jeyaseeli's passing, my heart overflows with gratitude for her extraordinary life and legacy.

Jeyaseeli was the embodiment of love, affection, and care — not just within our family, but far beyond. She carried the weight of a large family on her shoulders with grace and unshakable strength. Through her selfless efforts, she laid the foundation for many successful families by running a marriage bureau that touched countless lives.

When I began my journey with Arvind Polymers, she was always there — ready to help, especially in times of financial strain. She would negotiate on my behalf with our cousin brother David and stood by me like a pillar of strength. She also referred many capable and trustworthy people for jobs, always thinking of others' well-being. I often wondered where she found such abundant energy.

She was a devoted wife, supporting my cousin brother David a responsible government officer who was frequently transferred across the country. As a mother of three, she nurtured her children with love, faith, and tireless dedication. Yet, she didn't stop there. Alongside her family duties, she remained deeply committed to social and spiritual causes — helping the church with both physical and prayerful support, offering job opportunities to the needy, and bringing comfort to grieving families. Whenever death struck any home around us, she was always the first to arrive, praying and standing with the bereaved.

The commandment "Love your neighbour" — so dear to Jesus — was etched in her heart and lived out daily through her actions.Till her last breath, she carried out her mission with confidence, joy, and unwavering faith — always true to Jesus and our beloved Mother Mary.

Today, I remember her noble deeds and thank God for the gift of her life. I offer my heartfelt comfort and prayers to my loving cousin brother David, Tony, Auxilia - Anand, Mony-Vivek and children - Aggie, D J (Dymphna Jennifer) and Gabriella. Together with Amali, Michael, Elizabeth, Irene, Ananya, and Iniya.

I join in remembering Jeyaseeli — a woman of great heart, faith, and purpose.

May her soul continue to rest in eternal peace, and her life be an inspiration to us all.

GABRIEL

# அம்மா இன்னும் ஒரு முறை

அம்மா இன்னும் ஒரு முறை
அம்மா! அம்மா! அம்மா!
என்னை மனதில் சுமந்து
உன் உயிரில் என்னை கலந்தவளே!

நீ இருக்கும் போது
உன்னோடு உறவாடிய நேரம்
என்றும் என் மனதில்

“டோனி” என்று அன்பாய் அழைத்த நீ,
இன்று எங்கே போனாய் அம்மா?

நான் கூப்பிடும் போது
உன் குரல் மட்டும் என் காதில் ஒலிக்கிறது,
ஆனால் நீ வரவில்லை.

ஏன் இவ்வளவு சீக்கிரம் பிரிந்தாய்?
என்னை தனியே தள்ளி விட்டாய்?

பத்து மாதம் மட்டும் இல்லை அம்மா
46 வருடங்கள் என்னை சுமந்தாய் நீ!
ஆனால் இப்போது நீ இல்லாத இந்த நேரம்
என் மனதில் சுமைகள் குவிகிறது.

உன் சிரிப்பு தான் என் ஆயுள்,
உன் குரல் தான் என் ஆறுதல்,
இன்று அந்த இடம் வெறுமை,
என் மூச்சே உன்னைக் தேடி அலையுது.

ஒரு வருடம் கடந்துவிட்டது,
ஆனால் ஒவ்வொரு நாளும் என் கண்களில் கண்ணீர் மட்டுமே.

அம்மா, நீ எனை கேட்கிறாயா?நான் உன்னை இன்றும் கத்திக்
கூப்பிடுகிறேன், நீயே என் உயிர்,
நீயே என் உலகம்!
கடவுளிடம் உன்னை ஒரு முறை கட்டிப்பிடிக்க வரம் வேண்டி கதறும்
உங்கள் அன்பு மகன்...

**TONY**

# அழகின் வடிவம் எங்கள் அம்மா

அன்பு, கருணை, இரக்கம், இவற்றை கலந்து பொட்டிட்டு சேர்த்தாய் மனித நேய அழகு

அறிவு, விவேகம், ஞானம், இவற்றை கலந்து மையிட்டு சேர்த்தாய் தலைமைக்கு அழகு

பரிவு, பொறுமை, தியாகம், மன்னிப்பு இவற்றை கலந்து மையிட்டு சேர்த்தாய் உறவுகளுக்கு அழகு

பிறர் நலனில் அக்கறை கொள்ளுதல் என்ற தோடிட்டு சேர்த்தாய் பாசமிகு மனதுக்கு அழகு

இறையன்பு, பிறரன்பு, பிறருக்காக ஜெபித்தல் என்றவற்றை கழுத்தில் அணிந்து சேர்த்தாய் இறை பக்திக்கு அழகு

பிறர் தேவையில் உதவுதல், விட்டுக்கொடுத்தல், பிறர் வாழ வாழ்த்துதல் என்ற வளையல்கலிட்டு சேர்த்தாய் தியாக வாழ்வில் அழகு

காதல், தாய்மை, குடும்பம், பேரன்பு என்றவற்றை மோதிரங்களாய் அணிந்து சேர்த்தாய் தாய் பாசத்துக்கு அழகு

சேவை, பகிர்வு, பாசம், நேசம் கடல் அளவு கொண்டு, இவற்றை சேலையாய் உடுத்தி சேர்த்தாய் இறை சேவைக்கு அழகு

பிறர் சூழ்நிலையில் தன்னை வைத்து பார்த்தல் என்ற காலனிகள் அணிந்து சேர்த்தாய்உணர்வுகளுக்கு அழகு

ஏற்றுக்கொள்ளுதல், இறைவனுக்கு ஒப்புக்கொடுத்தல் என்றவற்றை கொலுசிட்டு சேர்த்தாய் தாழ்மைக்கு அழகு

இறையன்பை பிறருக்கு பறைசாற்றுதல் என்ற பூச்சூடி சேர்த்தாய் இறை பணிக்குஅழகு

இயேசுவின் பிள்ளை, மரியன்னையின் மகள் என்பதை மட்டும் மகுடமாய்அணிந்ததால் பெற்றாய் இறை மகளின் அழகு

அழகின் வடிவம் எங்கள் அன்பு அம்மா!

**MONY (U.K)**

# UNIQUE LOVE OF MY AUNTY

One of the most beautiful qualities about Aunty was her helping nature. She had this unique kind of love one that showed itself through service, through always being ready to step in for others. No matter who it was or what the situation was, Aunty's first instinct was always to help. That quality made her truly special and unforgettable.

When we first moved to India, Aunty became our greatest support. At a time when everything felt uncertain, new surroundings, new responsibilities, and new decisions, she stood by us and made things so much easier. I still remember, when we were struggling to decide which school to enrol Gabby in, Aunty didn't wait, didn't hesitate. Even late at night, she went to her friend's house, spoke to the right people, and had everything arranged. By the time we reached Chennai, everything was ready. We didn't have to lift a finger because Aunty had already done it all.

For Gabby, Aunty was more than family. She was a protector, a comfort, and in many ways, a second mother. She made sure Gabby had not only what she needed but also what would make her happy. Her constant thought was always: "Is Gabby smiling? Is she comfortable?" And she would go to any extent to make sure the answer was yes.

But what was most remarkable is that this same love and care she gave Gabby, she also gave to everyone around her. In the community, Aunty was known for her open heart and helping hand. If someone was sick, she was the first to visit. If there was a family in need, she quietly found a way to support them. If there was a gathering, she was there, contributing her time, energy, and warmth, never thinking of herself first.

Her love was never limited to just her family it extended to neighbours, friends, and even people she barely knew. Aunty believed that kindness was something to be shared freely, and through her actions, she built a community of care. She showed us that true love is not in words but in what we do for others. Her generosity, her encouragement, her ability to comfort people in difficult times these touched so many lives beyond our own.

Today, as we remember her, we do so with deep gratitude and pride. Aunty was a blessing in our lives, and the way she cared for us will remain in our hearts forever. But more importantly, her life gives us a lesson to carry forward. If we can follow even a little of her example, if we can extend our love, our help, and our support to those around us, then her spirit will continue to live on in this world. That is the best way we can honour her by carrying her love into our own actions and by making our community stronger, just as she did.

**VIVEK,** U.K

# AMMACHI - A LIGHT THAT NEVER GOES OFF

When I think of Ammachi, I think of a light that never goes out. Her love is like the sun, always steady and warm, always shining on me even from thousands of miles away. Even though we lived so far away from each other, I never once felt far from her. She always had away of reaching me, whether it was through her voice, her songs, or the words she would say to cheer me up. She always knew exactly how to make me feel better and reminded me to believe in myself.




Her love is also like a song. Whenever she sang to me it wasn't just music. It felt like comfort and safety and joy all in one. Her singing made me feel like the most special person in the world. Even now when I think about her I can still hear her voice in my heart.

I also think about how she cared for me in all the small ways. She would always ask what I wanted, what she could get for me, and she would never take no for an answer. Even from thousands of miles away she wanted to send gifts and make me feel loved. That was who she was- always giving, always making sure we felt her love no matter the distance.

What I admire most though is her faith. She prayed with her whole heart and her prayers were so powerful. I know she is still praying for us in heaven and still asking God to bless us and guide us. Her strength in prayer is something I will always carry with me and something I hope to live up to.

Ammachi's love was bigger than words, bigger than distance, bigger than anything. To me she will always be that unending light, the kind that makes you feel safe and warm. I love her so much, and even though she is in heaven, her love is still with me every single day.

**AGGIE,** U.S.A



# AMMACHI - A GIANT JAR OF JELLYBEANS



In my eyes, Ammachi is like a giant jar of jelly beans. Every time I go to a carnival, or a school event, they always have a jellybean guessing jar. Hundreds of students write down their guess on the pad of paper. No matter how close they are, to this day I don't know of one person who got it right on the dot. Similarly, hundreds, even thousands of people can guess how many things Ammachi did for me, but the answer is above and beyond a single number. It can go all the way up to infinity, even past infinity if something like that exists.

Out of all our memories together, there is one that still has my heart to this day. Having lived in America all my life, going to India is always nerve-racking for me, especially going in an auto. I would always close my eyes every time I saw a bump coming close, my heart beating loudly in my chest. The day I went in an auto with Ammachi was a whole different experience for me. Instead of feeling scared and anxious, I felt happy and loved sitting on her lap while she hugged me close. In one of my favorite country songs "Sun to Me" by Zach Bryan, there is a lyric that says "Find someone who grows flowers in the darkest parts of you." That's the person that Ammachi was in my life. Even though we were more than 8,000 miles apart, talking to her on the phone would instantly turn my bad day into the most amazing day ever. She was always so supportive and happy when I would show her my new slime, or knitted beanie, and her soft smile and inviting voice would remind me daily that I am one of the luckiest girls in the world, just because I had a grandma like her. So here is a knitted heart for you Ammachi.




**DYMPHNA JENNIFER (DJ),** USA

# AMMACHI - A LOVING BUTTERFLY

Oh Butterfly, tell me this isn't real
I swear you were here a moment ago
But now you're nowhere near
Oh Butterfly, your song's on the radio
The word's are dancing in the air
Are you down here?
Are you up there?

Just promise me you'll never leave me
Don't say I never loved you most
I'd give anything to have you standing here
Instead of (a butterfly) Just promise me you won't forget me
Don't leave my wings broken like this
I'd give anything to run into your arms

Oh Butterfly, can you tell me what you see?
Cause I wanna be just like you I wanna be
Loving, kind and sweet
But Butterfly, the world is not as kind
But your smile could make the kings bow down
Please give me some light

Just promise me you'll never leave me
Don't say I never loved you most
I'd give anything to have you standing here
Instead of (a butterfly) Just promise me you won't forget me
Don't leave my wings broken like this
I'd give anything to run into your arms

I can't explain it
It's complicated
The way i wish that one day if i woke up
You would be there and
I wish you could've stayed
Just to show me the way
And in the darkness you could've been my guide

Just promise me you'll never leave me
Don't say I never loved you most
I'd give anything to have you standing here
Instead of (a butterfly) Just promise me you won't forget me
Don't leave my wings broken like this
I'd give anything to run into your arms Again

**GABBY**, UK

# AMMACHI IS BEST, THE BEST TO ALL OF US

She didn't just help her community, she sparked aflame a light in our hearts that could never go out.

She taught us that happiness comes from helping other people, and kindness, and most importantly, love.

She taught us all and everyone who knew her that love is the most powerful thing that can make the light of God shine through you. And even when she was sick, even when she had bandages and bruises on her face, even when she was in hospital, The light of God shone through her face and everyone who saw that light was certain that she would definitely be close to God.

I can still remember, when I was around 7 years old, how I would sit on her lap, and she would tell me stories in Tamil and tickle me to make me laugh. I remember how she used to teach me to speak Tamil and go over each syllable carefully with me. And whenever I would call her, she would blow kisses through the phone and tell me how much she loved me, and told me to study well, and told me that she would pray for me, and she would ask me to pray for her and Thatha. And I would.

And I love her so much. Because she may be in heaven, but I can still feel her presence right next to me and I can still feel her living on in my heart. And I would be honoured to carry on her legacy of always helping others. Even for smallest thing she would put others before herself. And even if I could be even 1% of what she is I would be so blessed right now.

But I know this: right now, she is in heaven and praying for all of us to continue what she has done on Earth. She is praying for the light of God to shine through while we help others and be kind and loving to so many people. Because for every little loving thing we do, Ammachi continues to live through us.

**GABBY** (UK)

# அக்கா என்னும் அன்பு உறவு

ஒரு அன்பு உறவு
அக்கா அக்கா என்று
நான் அழைக்க
தங்கையாய் மட்டும் என்னை எண்ணாமல்
மகளாய் நேசித்து
எந்த நேரத்திலும் உதவி செய்து
அன்போடு என்னையும் குடும்பத்தில் ஒருத்தியாக்கி
இன்று குடும்பத்தோடு என்னை மட்டும் விட்டுவிட்டு
எங்கு போனீர்கள் அக்கா?
உங்கள் உயிர் பிரியும்போது
உங்கள் உறவாக உங்கள் அருகில்
உங்கள் சிரிப்பும் சத்தமும்
என் காதில் என்றும் ஒலிக்க
கண் கலங்கி நிற்கும்
உங்கள் அன்பு உறவு.

**DEVI**

# விசுவாச ஓட்டத்தில்...

விசுவாச ஓட்டத்தில் ஓடி ஜெயித்து, இறைவனின் பாதம் சென்றிருக்கும் திருமதி ஜெயசீலி அம்மா அவர்கள் அன்னாள் அன்பிய பொறுப்பாளராக இருந்து அன்பியத்தை சிறந்த முறையில் வழிநடத்தினார் என்பதை விட, தன் அன்பினால் குடும்பங்களை இணைத்து இருக்கிறார் என்பதுதான் உண்மை! எப்போதும் அழகான புன்னகை அனைத்தையும் நேர்த்தியாக செய்யும் முறை என்று அவருக்கென்று எப்போதும் தனி பாணி தான். பாடல்களை எழுதுவது பாடி இறைவனின் மகிமையை பறைசாற்றுவது, முன்னுரை, மன்றாட்டு, நற்செய்தின் கருத்துக்களை தொகுப்பது, அன்னை மரியாவை பற்றிய கட்டுரைகளை எழுதுவது என்று பல்வேறு திறமைகளை உள்ளடக்கியவர். குறிப்பாக மற்றவர்களின் திறமைகளை நன்கு அறிந்து அதை மெருகேற்ற வழிகாட்டியவர்.

பாத்திமா அன்னை திருத்தலத்திலே பங்கு பேரவை, வழிபாட்டுக்குழு, ஆயிரம் ஜெபமாலை குழு போன்றவற்றில் சிறப்பாக செயல்பட்டு தனக்கென்று தனி முத்திரையை பதித்தவர். அன்பிய குடும்பங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வது அவர்களுக்காக எப்போதும் ஜெபிப்பது, அன்பினாலே உறவுகளை பலப்படுத்துவது, பாகுபாடு இன்றி அனைவருக்கும் உதவி செய்வது போன்றவை அவர்களின் சுயநலமற்ற இயல்பை வெளிக்காட்டியது. மற்றும் மகளிர் சுய உதவிக் குழு தலைவியாக இருந்து பாண்ட்ஸ் கம்பெனி வழியாக ஏழை எளிய பெண்களுக்கு வீட்டில் இருந்தபடியே வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தந்தவர். உடல்நல குறைபாடு இருந்தாலும் உள்ளத்தில் உறுதியுடன் ஆன்மீக செயல்களில் ஈடுபாடு கொண்டு விசுவாச வாழ்வுக்கு முன்மாதிரியாக செயல்பட்டவர். குறிப்பாக அன்பிய வாரியாக நடைபெறும் நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகளில் நாங்கள் பங்கு பெற வேண்டும் பரிசு பெற வேண்டும் என்று எப்பொழுதும் வழிகாட்டியவர். இன்றும் ஜெயசீலியம்மா அவர்களின் சாட்சிய வாழ்வு எங்கள் இதயங்களில், நினைவுகளில், அன்றாட பேச்சில், காற்றைப் போல கலந்திருக்கிறது.

அன்னாள் அன்பியம்
பாத்திமா அன்னை திருத்தலம்
தாம்பரம்.

# அம்மாவின் இறைப்பணி

# அம்மாவின் இறைப்பணி

- பாத்திமா அன்னை திருத்தலம், தாம்பரம்.
- பங்குப்பேரவை உறுப்பினர், அன்னாள் அன்பிய பொறுப்பாளர்.
- வழிபாட்டுக்குழு உறுப்பினர்: From the year 1992.
- அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் நிரந்தர உறுப்பினர்.

ற்செய்தியாளர்களாக மாறவும் பங்கின் வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு ஏற்படு
இவ்வமைப்பு இறையேசுவின் அன்பை சான்று பகர்வதில் மேலும் வளர பாதுகா
பாத்திமா அன்னையின் நல்லாசியை இறைஞ்சுவோம்.

F. பெலிக்ஸ் பிலே
பொது செயலா

## சான்று பகரும் சிறு சமூக அமைப்பாளர்கள்

**F. பெலிக்ஸ் பிலோமன்**
(பொது செயலாளர்)

**A. சுவாமிநாதன்**
(இணை செயலாளர்)

1) கணபதிபுரம் தொகுதி
பொது அமைப்பாளர் :
திருமதி. **அந்தோணி புஷ்பம்**

அமைப்பாளர்கள் :
1. பிரான்சிஸ் குவிண்டன்
2. ஜெயசீலி டேவிட்
3. M. ஜெயசீலி
4. சுசீலா ஆல்ப்ரட்
5. பத்திரிஸ் அம்மாள்
6. K. ஜேம்ஸ்

2) இரயில்வே காலனி :
தொகுதி பொது அமைப்பாளர் :
J. ஆரோன்

அமைப்பாளர்கள் :
1. கேத்தரின்
2. லீலா ஆல்பர்ட்
3. மரிய வில்சன்

அமைப்பாளர்கள் :
1. தாமஸ்
2. E.M. பெரைரா
3. ஆரோக்கியதாஸ்
4. I. செல்வராஜ்

5) இரும்புலியூர் தொகுதி
பொது அமைப்பாளர் :
புஷ்பநாதன்

அமைப்பாளர்கள் :
1. சூசைமரி டேவிட்
2. அந்தோணி தாஸ்

6) மேற்குத் தாம்பரம் தொகுதி
பொது அமைப்பாளர் :
நோயல்

அமைப்பாளர்கள் :
1. ஆன்ட்ரு
2. சகாயராஜ்

7) இரங்கநாதபுரம் - கஸ்தூரிபாய் தொகுதி
அமைப்பாளர் :




– 1997 –


# அம்மாவின் எழுத்துப்பணி

1. புத்தகத்தின் பெயர்: பேழை முன் ஏழை
ஆசிரியர் : திருமதி. ஜெயசீலி டேவிட்
வெளியீடு : ஜீவ லயா வெளியீடு

2. புத்தகத்தின் பெயர் : அன்னைமரி புகழ் ஆயிரம்
ஆசிரியர் : திருமதி. ஜெயசீலி டேவிட்
வெளியீடு : ஜீவ லயா வெளியீடு


பேழை முன் ஏழை
திருமதி. ஜெயசீலி டேவிட்
செல்வி. மார்கிரேட் ஜோவிட்டா. ஜே



"கேளுங்கள்,
உங்களுக்கு கொடுக்கப்படும்;
தேடுங்கள்,
நீங்கள் கண்டடைவீர்கள்;
தட்டுங்கள்,
உங்களுக்கு திறக்கப்படும்.
ஏனெனில்,
கேட்போர் எல்லாரும்
பெற்றுக்கொள்கின்றனர்;
தேடுவோர் கண்டடைகின்றனர்
தட்டுவோருக்கு திறக்கப்படும்"
(மத்தேயு 7:7)

**ஜெபம்**

ஆண்டவரே என் இதய துடிப்பு அனைத்தும் உம்மை அ செய்யட்டும். என் இரத்த ஓட்டம் அனைத்தும் உம்மை துதிக்கட்டும். என் சுவாசம் அனைத்து உம்மை ஆராதிக்கட்டும். எ உள் உறுப்புகள் அனைத்தும் உமக்கு நன்றி செலுத்தட்டும்.

- ஆமெ

# பேழை முன் ஏழை

(முப்பதுநாள் ஆராதனை, செப சிந்தனைகள்)


திருமதி. ஜெயசீலி டேவிட்
அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் நிரந்தர உறுப்பினர்,
தூய பாத்திமா அன்னை திருத்தல அன்னாள் அன்பிய பொறுப்பாளர்,
பங்குபேரவை உறுப்பினர், வழிபாட்டுக்குழு உறுப்பினர்.

செல்வி. மார்கிரேட் ஜோவிட்டா. ஜே, B.Sc., B.Ed.,

**ஜீவ லயா வெளியீடு**
திருமண தகவல் மையம்
எண்.24, 2வது குறுக்கு தெரு,
எம்.இ.எஸ்.ரோடு, கிழக்கு தாம்பரம்,
சென்னை – 600 059 செல் : 99412 86142

## புத்தக விவரங்கள்


- நூல் – பேழை முன் ஏழை
- வகை – ஆன்மீகம்
- ஆசிரியர்கள் – திருமதி. ஜெயசீலி டேவிட்
  செல்வி. மார்கிரேட் ஜோவிட்டா. ஜே
- வெளியீடு – ஜீவ லயா வெளியீடு
- அமைப்பு – விஷ்ணு கிராபிக்ஸ்
  ஆழ்வார்திருநகர், சென்னை – 87.
- உரிமை – திருமதி. ஜெயசீலி டேவிட்
- முதல் பதிப்பு – ஏப்ரல் 2017 (1000 புத்தகம்)
- இரண்டாம் பதிப்பு – மே 2017 (1000 புத்தகம்)
- அச்சகம் – இமான் அச்சகம், சென்னை
  செல் : 9940555625
- கிடைக்குமிடம் – 1. திரு.ஜோசப் ஸ்டான்லி
  (செல் : 97899 69618)
  2. தீபகம்
  தொன்போஸ்கோ மறைபணி நிலையம்,
  சென்னை –10 போன் : 044–2642816


அன்னை மரி
புகழ் ஆயிரம்
திருமதி. ஜெயசீலி டேவிட்

## பொருளடக்கம்


| வ.எண். | பகுதி - I | பக்கம் |
|---|---|---|
| | இறைவார்த்தையில் தியானிப்போம் (திருமதி.ஜெயசீலி டேவிட்) | |
| 1. | ஆசி | 9 |
| 2. | ஒளி | 13 |
| 3. | ஆறுதல் | 17 |
| 4. | பகிர்வு | 20 |
| 5. | பணிவு | 23 |
| 6. | பொறுமை | 25 |
| 7. | கோபம் | 28 |
| 8. | பொறாமை | 31 |
| 9. | அச்சம் | 34 |
| 10. | ஞானம் | 38 |
| 11. | நீதி | 41 |
| 12. | நேர்மை | 44 |
| 13. | தன்னடக்கம் | 47 |
| 14. | குடும்ப வாழ்க்கை | 49 |
| 15. | நிலைவாழ்வு | 52 |
| **வ.எண்.** | **பகுதி - II** | **பக்கம்** |
| | நற்கருணை முன் தியானிப்போம் (செல்வி. மார்கிரேட் ஜோவிட்டா ஜே) | |
| 16. | அன்பு | 55 |
| 17. | மகிழ்ச்சி | 59 |
| 18. | சமாதானம் | 63 |
| 19. | விசுவாசம் | 67 |
| 20. | கீழ்ப்படிதல் | 71 |
| 21. | தெய்வபயம் | 75 |
| 22. | இரக்கம் | 79 |
| 23. | மன்னிப்பு | 82 |
| 24. | நன்மை செய்தல் | 85 |
| 25. | உண்மை | 89 |
| 26. | உழைப்பு | 93 |
| 27. | படைப்பு | 97 |
| 28. | விழித்திருப்பு | 101 |
| 29. | தாழ்ச்சி | 105 |
| 30. | சமத்துவம் | 109 |




பேழை முன் ஏழை

# அன்னைமரி புகழ் ஆயிரம்

**திருமதி. ஜெயசீலி டேவிட்**

அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் நிரந்தர உறுப்பினர்,
தூய பாத்திமா அன்னை திருத்தல அன்னாள் அன்பிய பொறுப்பாளர்
பங்குபேரவை உறுப்பினர், வழிபாட்டுக்குழு உறுப்பினர்

---

ஜீவலயா வெளியீடு
திருமண தகவல் மையம்
எண் : 24, 2வது குறுக்குதெரு, எம்.இ.எஸ்.ரோடு,
கிழக்கு தாம்பரம், சென்னை - 600 059.

## புத்தக விவரம்

| | | |
|---|---|---|
| நூல் | : | அன்னை மரி புகழ் ஆயிரம் |
| வகை | : | ஆன்மீகம் |
| ஆசிரியர் | : | திருமதி.ஜெயசீலி டேவிட் |
| வெளியீடு | : | ஜீவாலய வெளியீடு |
| அமைப்பு | : | தீபிகா |
| உரிமை | : | திருமதி.ஜெயசீலி டேவிட் |
| முதல் பதிப்பு | : | ஆகஸ்ட் 2017 |
| அச்சகம் | : | இமான் அச்சகம், சென்னை<br>செல் : 9940555625 |
| கிடைக்குமிடம் | : | திருமதி.ஜெயசீலி டேவிட்<br>செல் : 9941286142 |

தீபகம்:
தொன்போஸ்கோ மறைபணி நிலையம்
சென்னை - 10.
போன் : 044-26428162

தீபிகா
தொன்போஸ்கோ கலைதொடர்பு நிலையம்
45 லான்டன்ஸ் சாலை, கீழ்பாக்கம்,
சென்னை-10, போன்: 044-42857862

## என்னுரை

மணம் வீசிடும் மலர்கள் நிறைந்த அழகிய தேவதை அன்னைமரிக்கு, செபமாலை எமக்குத் தந்து, ஜெயம் வாழ்வில் கொடுத்த அன்னைக்கு, எத்தனை விதமான மலர்மாலைகளும் ஈடாகாது. ஆகவே என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து எங்களை வாழ்க்கை முழுவதும் அலங்கரித்துக் கொண்டிருக்கும் அன்னைக்கு நன்றியாக அன்னை (மரி) புகழ் ஆயிரம் என்ற நூல் எங்கள் குடும்பத்தின் நன்றியாக காணிக்கையாக்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சிறுவயதில் தேவமாதாவை அறிந்தேன். படிக்கும் வயதில் சகாயம் புரியும் சகாய மாதாவை கண்டு கொண்டேன். விவேகம் வந்த போது வில்லியனூர் மாதா காலடியில் நின்றேன். லூர்து மாதாவிடம் மெழுகு திரி ஏந்தி ஜெபித்தபோது அலங்காரமாதா எங்கள் மண வாழ்வை அலங்கரித்தாள். ஆரோக்கிய மாதா அதை உறுதிபடுத்தினாள். ஒவ்வொரு முறை அவளை காணச் செல்லும் போதும் தாய் வீட்டுச் சீதனம் தந்து அனுப்புவாள் என்தாய். எங்கள் குடும்பத்தை பாதுகாக்க பாத்திமா அன்னையிடம் அனுப்பி வைத்தாள். பரிந்து பேசும் பார் புகழ் நாயகி பாத்திமா அன்னை எம்மை இன்றளவும் பாதுகாத்து வருகின்றாள். நெஞ்சிம் நிறை நன்றி கலந்த உள்ளத்தோடு சமர்ப்பிக்கிறேன் அன்னை (மரி) புகழ் ஆயிரம் என்ற நூலை.

அளவில்லாத அனபும் இரக்கமும் உள்ள இறைவா! பாத்திமா அன்னை என்று அன்போடு அழைத்து உம் தாயை அண்டிவரும் எம் உள்ளங்களில் அவர்மீது ஆழ்ந்த நம்பிக்கை பெருகச் செய்யும். அன்னையின் வல்லமைமிகு பரிந்துரையால் நாங்கள் கேட்கும் உடல் ஆன்ம அருள் வரங்களை எங்களுக்கு தாரும். எங்கள் மீட்பர் இயேசு கிறிஸ்துவின் வழியாக உம்மை மன்றாடுகின்றோம்
-ஆமென்

ஜீவலயா வெளியீடு
திருமண தகவல் மையம்
எண் : 24, 2வது குறுக்குதெரு, எம்.இ.எஸ்.ரோடு,
கிழக்கு தாம்பரம், சென்னை - 600 059.

100 – ஆம் ஆண்டு திருக்காட்சி நினைவாக



தூய பாத்திமா அன்னைக்கு

1917 2017

## ஆண்டவருக்கும் அன்னை மரிக்கும் நன்றியாக !

## அர்ப்பணிக்கிறோம்

தாயின் கருவில் உருவாகும் முன்னே, பெயர் சொல்லி அழைத்த என் ஆண்டவர் தம் உள்ளங்கையில் என் பெயரை பொரித்து வைத்த என் ஆண்டவர், அவர் கரத்தோடு என்கரம் சேர்த்து ஒவ்வொரு நாளும் நடத்திய என் ஆண்டவருக்கு அன்பு காலங்களை அர்ப்பணிக்கிறேன். எங்களை இந்நாள் வரையில் கண்ணின் கருமணி போல காத்து உன் சிறகின் நிழலில் அரவணைத்து, நோயில் சுகம் தந்து. கவலையில் விடுதலை அளித்து, தனிமையில் ஆறுதலாகி, புரியாத போது ஆலோசனையாகி, தெரியாததை போதித்து, விழுந்தபோது தூக்கி எடுத்து, தவறியபோது நேர்வழியில் நடத்தி, பலவீன நாட்களிலிலே பெலன் தந்து, வாழ்க்கையே பாரமாகி நின்றபோது, சுமப்பவராகி, இருளில் இருந்த போது ஒளியாகி, ஊமையான போது வார்த்தையாகி, எங்களோடு தங்கி எங்கள் தேவைகளை சந்தித்து, எங்களை வழிநடத்தி, எங்கள் வாழ்வாகி நிற்கும் எம் ஆண்டவர் இயேசுவுக்கும் என்றும் எமக்காய் பரிந்து பேசி நிற்கும் அன்பு அன்னை மரிக்கும். எங்களின் நன்றி மலர்களை அர்ப்பணிக்கின்றோம்.



வெறுமையில், உள்ள வெறுமையில் செபித்தால் [illegible] கையே வெல்லலாம். உள்ள உவப்புடன் உரையாடினால் உண்மையால் ஆன்மாவை நிரப்பலாம். மிக எளிய நடையில் இனிய தமிழில் இந்த ஜெப புத்தகம் தமிழில் வெளிவருவது குறித்து மகிழ்கின்றேன்.

அருட்பணி. ஐசக், ச.ச., தலைமையாசிரியர்,
தொன்போஸ்கோ பள்ளி, ஜோலார்பேட்டை

நற்செய்தியும் நற்கருணையும் கத்தோலிக்க நம்பிக்கையின் இரு தூண்கள் என்பது நாம் அறிந்ததே. இவ்விரண்போடும் நெருங்கிய உறவுக்கொள்ள நமக்கு ஆர்வமுடன் அழைப்பு விடுக்கிறது இந்நூல். நற்செய்தி பகிர்வோம், நற்கருணையாய் வாழ்வோம், நம்பிக்கையில் வளர்வோம்.

அருட்பணி. ஆண்டனி கிறிஸ்டி, ச.ச.,
தீபகம் மறைப்பணி மையம். சென்னை

இறைவனின் சந்நிதி மனதிற்கு நிம்மதி, இறைபிரசன்னமே செபத்தின் உறைவிடம் வேண்ட தக்கது அறிவாய் நீ வேண்ட முழுவதும் தருவாய் நீ ! மந்திரம் ஆவதும், மாமருந்து ஆவதும், சுந்தரம் ஆவதும் தூயநெறி ஆவதும் எந்தைபிரான்தன் இணையடி தானே என்று இறைவனில் சங்கமிக்க அழைக்கும் முத்துச்சரமே "பேழைமுன் ஏழை!"

அருட்பணி. சிற்றரசு, ச.ச., அருளோதயம் ஆசிரமம், வேலூர்.

இறைவார்த்தை நமக்கு கற்றுத்தரும் வாழ்க்கை அனுபவங்களையும், நம்முடைய ஒவ்வொரு நாள் செயல்பாடுகளையும், உறவு முறைகளையும், ஒன்றினைத்து நற்கருனை நாதரை போற்றவும், ஆராதிக்கவும் இந்த புத்தகம் சிறந்த கையேடாக அமைகிறது.

அருட்பணி. மரிய அல்போன்ஸ், ச.ச.,
சலேசிய இறையியல் கல்லூரி, சென்னை

## படைப்பாளிகள்

திருமதி. ஜெயசீலி டேவிட்
செல் : 99412 86142

செல்வி. மார்கிரேட் ஜோவிட்டா. ஜே
செல் : 96293 73712

**ஜீவ லயா வெளியீடு**
திருமண தகவல் மையம், எண்.24, 2வது குறுக்கு தெரு,
எம்.இ.எஸ்.ரோடு, கிழக்கு தாம்பரம், சென்னை – 600 059.

விலை 60/-

# அம்மாவின் சமூகப்பணி

1. சுய உதவிக்குழு
அன்னை தெரேசா மகளிர் மன்றம்

2. திருமண தகவல் நிலையம்
ஜீவ – லயா

அன்னை தெரசா மகளிர் மன்றம்
அடையாளத்திற்கு

1/2

**Pond's (India) Limited**

*PERSONAL PRODUCTS DIVISION*

108, G. S. T. ROAD, CHROMEPET, MADRAS - 600 044. INDIA

TELEPHONE : 2366090 * TELEX : 041-26073/041-26158 * TELEFAX : 044-2367805

No. 77

DATE : 11/06/97

ANNAI TERESA MAGALIR MANDRAM
12, SHARMA STREET
EAST TAMBARAM
CHENNAI - 600059

...men :

Please find enclosed TDS certificates as detailed below :

| ...tificate No. | Amount of Tax Rs. | Amount Paid or Credited Rs. | Date of Payr... |
|---|---|---|---|
| 795 | 80.00 | 4000.00 | 07/02 |
| | | | |
| | | | |
| | | | |

**Pond's (India) Limited**

PERSONAL PRODUCTS DIVISION

108, G.S.T. ROAD, CHROMEPET, CHENNAI - 600 044. TAMILNADU, INDIA.

TELEPHONE : 2366090 • TELEX : 041 -26073/041-26158 • TELEFAX : 044-2367805.

April 10, 1997.

To

All Job Workers Annai Teresa magalir mandram

Dear Sirs,

Sub : Issue of materials under 57F(4) Challans
*********

We request you to send us a letter during the first wee' every month repeat every month giving status of challan which job is to be completed by you.

Wherever the job work is not completed within 60 days kindly let us have a letter well in advance (say one before the due date) from you stating the reasons for the job is not completed and also mention the time re for you to complete the job.

This is necessitated to meet excise compliance.

We hope and trust that you all would extend your valı operation in this regard.

Thanking you,

திருமண தகவல் நிலையம்
From 1994 -

1997

# ஜீவ – லயா

"ஜீவலயா" – திருமண தகவல் நிலையம் கடந்த ஒரு வருட காலமாக பாத்திமா அன்னை ஆலயத்தில் வெகு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

கணவன் அல்லது மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்தவரம். அருட்தந்தை அற்புதா அவர்களின் ஆசியுடன் கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட இந்த ஜீவலயா 30 திருமணங்களுக்கு சுருதி சேர்த்திருக்கிறது.

சேவை மனப்பான்மையோடு செயல்படும் இந்த நிறுவனத்தில் தொடர்பு கொண்டு பயன் பெறுங்கள்.

'இன்னார்க்கு இன்னார்' என்று இறைவன் எழுதியிருப்பதை ஏற்பாடு செய்து கொடுக்க இன்றைய 'ஜீவலயா' காத்திருக்கிறது.

தொடர்பு கொள்ள

**ஜீவலயா (திருமண தகவல் நிலையம்)**

பொறுப்பாளர் :-

**திருமதி. ஜெயசீலி டேவிட்,**
No.2, M.E.S. சாலை,
பாத்திமா அன்னை வணிக வளாகம்,
கிழக்கு தாம்பரம், சென்னை - 59
தொலைபேசி - 237522
நேரம் : 7 p.m. to 8.30 p.m.

*கூடி செபிக்கும் குடும்பம் சேர்ந்து வாழும்.*

---

கடவுளால் கூடாதது ஒன்றும் இல்லை. (லூக் 1 - 37)

AVEMARIA

## ஜீவலயா
## திருமண தகவல் நிலையம்

நெ.24, 2-வது குறுக்கு தெரு, எம்.இ.எஸ். ரோடு,
கிழக்கு தாம்பரம், சென்னை - 600 059.
போன் : 22790061 / 9941286142 மின்னஞ்சல் : jeevalaya@gmail.com

பதிவு எண். தேதி : ..................

மணமகன் / மணமகள் பெயர் : ..................
பிறந்த தேதி, வயது, நேரம் : ..................
உயரம் : ..................
நிறம் : ..................
மதம், ஜாதி : ..................
படிப்பு : ..................
தொழில் : ..................
வருமானம் : ..................
தந்தை பெயர் : ..................
தந்தை தொழில் : ..................
தாய் பெயர் : ..................
தாய் தொழில் : ..................
உடன் பிறந்தோர் :

| | அண்ணன் | தம்பி | அக்கா | தங்கை |
|---|---|---|---|---|
| சகோத / சகோதரி | | | | |
| திருமணம் ஆனவர் | | | | |

எத்தனையாவது பிறப்பு :
முகவரி :
சொந்த ஊர் : தந்தை .................. தாய் ..................
வரன் எதிர்பார்ப்பு : ..................
தொடர்பு எண். : .................. மின்னஞ்சல் ..................

ரூபாய். 1000 பதிவு கட்டணம்,
சேவை கட்டணம் ரூ.10,000-த்தை திருமணம் நிச்சயிக்கப்பட்டவுடன் தர சம்மதிக்கிறேன்.

விண்ணப்பதாரின் கையொப்பம்

எக்காரணம் கொண்டும் பதிவு கட்டணம் திருப்பி தரப்படமாட்டாது.

---

கடவுளால் கூடாதது ஒன்றும் இல்லை
(லூக்காஸ் 1-37)

AVEMARIA

## ஜீவ லயா
## திருமண தகவல் நிலையம்

Time : Morning 10.30 to 1.00

**ஜெயசீலி டேவிட்**
நெ. 24, 2-வது குறுக்கு தெரு,
எம்.இ.எஸ். ரோடு, கிழக்கு தாம்பரம்,
சென்னை - 600 059.

போன் : வீடு 22790061
செல் : 99412 86142
E-mail : jeevalaya@gmail.com

---

### மிகவும் இரக்கமுள்ள தாயே

மிகவும் இரக்கமுள்ள தாயே! உமது அடைக்கலமாக ஓடிவந்து உம்முடைய உதவி நன்மைகளை இரந்து, உம்முடைய பரிந்துரையைக் கெஞ்சிக் கேட்ட ஒருவராகிலும், உம்மால் கைவிடப்பட்டார் என்று உலகில் சொல்லக் கேள்விப்பட்டதில்லை என்பதை நினைத்தருளும், கன்னியருடைய அரசியான கன்னியே! தயையுள்ள தாயே, இத்தகைய நம்பிக்கையால் தூண்டப்பெற்று உம்முடைய திருவடியை அண்டி வருகின்றேன். பெருமூச்சுடனும், அழுகையுடனும், பாவியாகிய நான் உம் கருணைக்குக் காத்துக் கொண்டு உம் திருமுன் நிற்கிறேன். மனுவுருவான வாக்கின் அன்னையே, என் மன்றாட்டைப் புறக்கணியாமல் எனக்காக தயவாய் வேண்டிக் கொள்ளும். - ஆமென்.

2012

கடவுளால் கூடாதது ஒன்றும் இல்லை.
லூக். 1:37

# ஜீவ லயா

## திருமண தகவல் மையம்

ஜீவ லயா திருமண தகவல் நிலையம்

கடந்த இருபது ஆண்டுகளாக வெகு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.
1500க்கும் மேற்பட்ட மனங்களை பாத்திமா அன்னையின் ஆசீருடன் சுருதி சேர்த்திருக்கிறது.
பவள விழா ஆண்டிலும் கானாவூர் திருமணத்தின் சுவையினில் மகிழ அன்னையின் அருளோடும் அன்பர்யேசுவின் ஆற்றலோடும் தூய சூசையின்

*திருமணத்தில் இணைய இன்றே நாடுவீர்,*
*ஜீவலயா திருமண நிலையத்தை தொடர்பு கொள்ள*

**திருமதி. ஜெயசீலி டேவிட்**

எண்.24–2வது குறுக்கு தெரு, எம்.இ.எஸ் ரோடு,
கிழக்கு தாம்பரம், சென்னை – 59.
தொலைபேசி : 2279 0061 அலைபேசி: 99412 86142
வலைபேசி : Jeevalaya@gmail.com

கூடி ஜெபிக்கும் குடும்ப [illegible]

---

Phone : 044 - 2279 0061

# JEEVA LAYA

## Marriage Information Centre

24, 2nd Cross Street, M.E.S. Road, East Tambaram, Chennai - 600 059.

No. 0504 **RECEIPT** Date : .................. 20

Received with thanks from ..........................................................................

..........................................................................................................

the sum of Rupees ..............................................................................

..........................................................................................................

by Cash/Draft/Cheque No. ...................................................................

towards the settlement of ....................................................................

Rs. For **JEEVA LAYA**

*(Cheques subject to realisation)*

# அம்மாவின் சுயதொழில்

# Business

## 1. Sole Proprietorships


**Trinity Shoppe**

Fatima Church Complex

East Tambaram

Chennai - 600 059.

From 1994 - 2004.



தேவனை நம்பியிருக்கிறேன் நான் பயப்படேன்.
மனுஷன் எனக்கு என்ன செய்வான். சங். 56 : 11

TRINITY SHOPE

# 3/2, M.E.S. Road, Fathima Church Complex,
East Tambaram, Chennai - 600 059. ✆ : 2375222

Date :

# இறந்தவர்களுக்கு வாழ்வளிக்கும் இறைவார்த்தைகள்...

உயிர்த்தெழச்செய்பவனும் வாழ்வு தருபவனும் நானே. என்னில் நம்பிக்கைகொள்பவர் இறப்பினும் வாழ்வார். உயிரோடு இருக்கும் போது என்னிடம்நம்பிக்கைக்கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்.(யோவான் 11:25-26).

மகனைக் கண்டு அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வுபெறவேண்டும் என்பதே என் தந்தையின் திருவுளம். நானும் இறுதி நாளில் அவர்களை உயிர்த்தெழச் செய்வேன். (யோவான் 6:40).

## வாழ்வோருக்கு எதிர்நோக்குடன் நம்பிக்கையளிக்கும் இறைவார்த்தைகள்

உயிர் நீத்தோர்க்கும் அன்பு காட்ட மறவாதே. (சீராக்கின் ஞானம்7:33).

அவரவர் நடத்தைக்கு ஏற்ப இறுதிநாளில் மனிதருக்குப் பரிசு அளிப்பது ஆண்டவருக்கு எளிதானது. (சீராக் 11:26).

மனிதருடைய வாழ்நாள்களின் எண்ணிக்கை கூடிப்போனால் நூறு ஆண்டுகள். நித்தியத்தோடு ஒப்பிடும் போது அந்தச் சில ஆண்டுகள் கடல்நீரில் ஒரு துளிபோன்றவை. கடல் மணலில் ஒரு துகள் போன்றவை. (சீராக் 18:9-10).

சகோதர சகோதரிகளே! இறந்தோரைப்பற்றி நீங்கள் அறிந்திருக்கவேண்டும் எனநாங்கள் விரும்புகிறோம். எதிர்நோக்கு இல்லாத மற்றவர்களைப்போல் நீங்களும் துயருறக் கூடாது. இயேசு இறந்து உயிர்த்தெழுந்தார் என நாம் நம்புகிறோம். அப்படியானால், இயேசுவோடு இணைந்த நிலையில் இறந்தோரைக் கடவுள் அவருடன் அழைத்து வருவார்.

ஆண்டவருடைய வார்த்தையின் அடிப்படையில் நாங்கள் உங்களுக்குக் கூறுவது இதுவே. ஆண்டவர் வரும் வரை உயிரோடு எஞ்சியிருக்கும் நாம் இறந்தோரை முந்திவிடமாட்டோம். கட்டளை பிறக்க, தலைமை வானதூதரின் குரல் ஒலிக்க, கடவுளுடைய எக்காளம் முழங்க ஆண்டவர் வானினின்று இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸது மீது நம்பிக்கை கொண்ட நிலையில் இறந்தவர்கள் முதலில் உயிர்த்தெழுவர். பின்னர் உயிரோடு எஞ்சியிருக்கும் நாம், அவர்களோடு மேகங்களில் எடுத்துக்கொண்டு போகப்பட்டு வான்வெளியில் ஆண்டவரை எதிர்கொள்ளச் செல்வோம். இவ்வாறு எப்போதும் நாம் ஆண்டவரோடு இருப்போம். எனவே இவ்வார்த்தைகளைச் சொல்லி ஒருவரை ஒருவர் தேற்றிக்கொள்ளுங்கள். (1தெசலோனிக்கர் 4:13-18)

**DAVID**


# மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்...

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்.
ஆனால் இறைவன் எனக்கு வரம் மட்டும்
தரவில்லை,
ஜெயசீலியை தந்து வாழ்க்கையையே அருளினார்.



ஒன்றுமில்லாத காலத்தில்,
வாழ்க்கைத் துணையாக வந்து,
அன்பை தந்து தோழியாய், தோளாய் நின்றாய்.

அறிவை பகிர்ந்து மனைவியாய்,
பாசத்தை பொழிந்து பிள்ளைகளின்
அன்னையாய்,
உறவை அணைத்து அண்ணியாய், மகளாய்,
சித்தியாய்,
எல்லா வடிவிலும் எனக்குப் பாசம் அளித்தாய்.



உன்னால் வீடு கோவிலானது,
உன்னால் நாட்கள் அர்த்தமடைந்தது.

நீ இல்லாத இந்த ஒரு வருடம்,
ஒவ்வொரு நிமிடமும் உணர்ந்தேன்
எல்லாமும் நீயே என்று.

இன்று உனக்காக ஜெபிக்கிறேன்,
உன் பாசம் நிறைந்த உறவுகளைத் தேடுகிறேன்.
உன்னைக் காணும் நாள்வரைஎன் மூச்சில் உன்
காற்று!
Dear Seeli, 1975ல் நம் அன்பு உறவு
மலர்ந்தபோது
உனக்கு ஒரு message அனுப்பினேன்.
ஞாபகத்துக்கு கொண்டுவருகிறேன்.

"Even though we are kept apart by distance I am spinning a bridge betweenyour heart and that of mine.
"But Now,"Even though we are kept apart by the God Almighty, I am spinning a bridge between your soul and my heart by fervent and earnest prayers.

*"With prayers*
**Loving Husband**

# அமைதி எப்போது கிடைக்கும்?

அன்பு உள்ள உள்ளத்தில்
இறை அன்பு உள்ள உள்ளத்தில்
பிறரன்பு உள்ள உள்ளத்தில்
பாசமுள்ள மனங்களில்
நேசமுள்ள கரங்களில்
கருணையுள்ள கண்களில்
வாழ்வு தரும் வார்த்தையாய்
தியாக உணர்வுகளால்
இரக்க செயல்களால்
பிறர் தேவையில் உதவும்போது
ஆறுதல் வார்த்தையால் தேற்றும்போது
தன்னை ஒறுத்து பகிரும் போது
மன்னிக்கும் மனம் பெறும்போது
விட்டுக்கொடுக்கும் போது
பிறர் வாழ வாழ்த்தும் போது
மற்றவர் நலனில் அக்கறை கொள்ளும்போது
பிறர் சுமையை ஏற்றுக்கொள்ள முன்வரும்போது
பாடுகளை விண்ணக ஏணியாக ஏற்கும்போது
தேவை உள்ள இடத்தில் சேவை செய்யும் போது
பிறர் உணர்வை மதிக்கும்போது
ஜெபத்தால் பிறரை தாங்கும் போது
இயேசுவை பிறருக்கு கொடுக்கும் போது
உன்னில் இயேசுவை காண வைக்கும் போது
யேசுவுக்கு புகழ். மரியே வாழ்க.

– ஜெயசீலி டேவிட்

# எங்கள் மனத்தில் ஜெயசீலி

அன்போடு அறிவும் கொண்ட அனுபவ சீலி
அன்னைக்கு பிடித்தமான அற்புத சீலி
ஆர்வமும் ஆற்றலும் கொண்ட ஆக்க சீலி
ஆண்டவனை கைக்குள் வைத்த ஆசை சீலி
இன்முகத்தை மட்டுமே இறுதிவரை தந்து
இறையடி சேர்ந்த இனிய சீலிஈசனுக்கு ஈதல் என்பதை ஈடுபாட்டுடன் செய்த
ஈடில்லா ஈஸ்வரி எங்கள் சீலி
உழைப்பு ஒன்றையே ஊன்று
கோலாய் கொண்டு உறவுக்கு உயிர் கொடுத்த உன்னத சீலி
எட்டுத்திக்கும் எவர்வரினும் எம்மவர் என்ற எண்ணமுடன் எல்லோரையும்
அரவணைத்த எழுச்சி சீலி
ஏற்றமுடன் நாம் வாழ எங்கேயும் ஏறிச்செல்ல
ஏணியாய் தனை தந்த ஏற்ற சீலி
ஒற்றை ஓவியமாய் ஓயாத காவியமாய்
ஓசையின்றி ஒவ்வொருவரும் முனுமுனுக்கும்
ஒரே சொல் ஜெயசீலி! ஜெயசீலி! ஜெயசீலி

**R. ஜேசுதாஸ் ராஜத்தி**
குடும்பத்தினர், திருச்சி.

# In Loving Memory of My Dear Sister Jeyaseeli

Butterfly version 2Oh Butterfly, tell me this isn't real
I always thought this would last forever
But now you are not here
Oh Butterfly, your song's on the radio
The melody's dancing in the air
Are you right here?
Are you up there?

Just promise me you'll never leave me
Don't say I never loved you most
I'd give anything to have to standing here
Instead of(a butterfly) Just promise me you forget me
Don't leave my wings broken like this
I'd give anything to run into your arms

Oh Butterfly, can you tell me what you see?
Do you see a girl who's just like you
Loving, kind and sweet?
Oh Butterfly, we know the world is not as kind
But your smile could make the kings bow down
Please give me some light

Just promise me you'll never leave me
Don't say I never loved you most
I'd give anything to have to standing here
Instead of(a butterfly) Just promise me you forget me
Don't leave my wings broken like this
I'd give anything to run into your arms

I can't explain it
It's complicated
The way I wake up in the dead of night
And realize you not there
And somehow I can hear you
If you're really inside and around me
I wish you could've stayed
Can you always stay by my side
I wanna be just like you can you be my guide?

Just promise me you'll never leave me
Don't say I never loved you most
I'd give anything to have to standing here
Instead of(a butterfly) Just promise me you forget me
Don't leave my wings broken like this
I'd give anything to run into your arms Again.

# MY AUNTY WITH HELPING NATURE

One of the most beautiful qualities about Aunty was her helping nature. She had this unique kind of love one that showed itself through service, through always being ready to step in for others. No matter who it was or what the situation was, Aunty's first instinct was always to help. That quality made her truly special and unforgettable.

When we first moved to India, Aunty became our greatest support. At a time when everything felt uncertain, new surroundings, new responsibilities, and new decisions, she stood by us and made things so much easier. I still remember, when we were struggling to decide which school to enrol Gabby in, Aunty didn't wait, didn't hesitate. Even late at night, she went to her friend's house, spoke to the right people, and had everything arranged. By the time we reached Chennai, everything was ready. We didn't have to lift a finger because Aunty had already done it all.

For Gabby, Aunty was more than family. She was a protector, a comfort, and in many ways, a second mother. She made sure Gabby had not only what she needed but also what would make her happy. Her constant thought was always: "Is Gabby smiling? Is she comfortable?" And she would go to any extent to make sure the answer was yes.

But what was most remarkable is that this same love and care she gave Gabby, she also gave to everyone around her. In the community, Aunty was known for her open heart and helping hand. If someone was sick, she was the first to visit. If there was a family in need, she quietly found a way to support them. If there was a gathering, she was there, contributing her time, energy, and warmth, never thinking of herself first.

Her love was never limited to just her family it extended to neighbours, friends, and even people she barely knew. Aunty believed that kindness was something to be shared freely, and through her actions, she built a community of care. She showed us that true love is not in words but in what we do for others. Her generosity, her encouragement, her ability to comfort people in difficult times these touched so many lives beyond our own.

Today, as we remember her, we do so with deep gratitude and pride. Aunty was a blessing in our lives, and the way she cared for us will remain in our hearts forever. But more importantly, her life gives us a lesson to carry forward. If we can follow even a little of her example, if we can extend our love, our help, and our support to those around us, then her spirit will continue to live on in this world. That is the best way we can honour her: by carrying her love into our own actions and by making our community stronger, just as she did.

**VIVEK**

# அர்ச்.அந்தோனியாரின் புண்ணிய தலங்களில் சொல்லத்தக்க செபம்.

இப்புண்ணிய சேத்திரத்தில் மாட்சிமை தங்கிய மேலான சிம்மாசனத்தில் கிருபாசனம் கொண்டு எழுந்தருளியிருக்கிற அர்ச். அந்தோனியாரே! பரிசுத்ததனம் விளங்கும் லீலியே! விலைமதிக்கப்படாத மாணிக்கமே! பரலோக பூலோக காவலே! கஸ்தி துன்பப்படுகிறவர்களுக்குப் பரம சஞ்சீவியானவரே, பாவிகளின் தஞ்சமே! உமது இன்பமான சன்னிதானம் தேடி வந்தோம். உமது திருமுக மண்டலத்தை அண்ணார்ந்து பார்த்து உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம். மகா சிரவணம் பொருந்திய அர்ச். அந்தோனியாரே! சூரத்தனமுள்ள மேய்ப்பரே! பசாசுகளை மிரட்டி ஓட்டுபவரே! திருச்சபையின் கருணையின் கண்ணாடியானவரே! உலகில் எங்கள் ஆதரவும் நீரல்லவோ! எங்கள் சந்தோஷமும் நம்பிக்கையும் பாக்கியமும் நீரல்லவோ! நீர் எங்கள் ஞானத்தந்தை என்பதை எங்களுக்குக் காண்பியும். பிள்ளைகள் செய்த குற்றங்களை தாய் தந்தை பாராட்டுவார்களோ? உம்மைத் தேடிவந்த நிர்ப்பாக்கியர் பேரில் தயவாயிரும். அழுகிற பேர்களை அரவணையும். அல்லல்படுகிறவர்களுக்கு ஆறுதலாக வாரும். நீர் இரங்காவிட்டால் எங்களுக்கு வேறு யார் இரங்குவார்? நீர் ஆதரியாவிட்டால் எங்களை வேறு யார் ஆதரிப்பார்? நீர் நினையாவிட்டால் எங்களை வேறு யார் நினைப்பார? நீர உதவாவிட்டால் எங்களுக்கு வேறு யார் உதவுவார்? தஞ்சமென்று ஓடி வந்த அடியோர்கள் பேரில் தயவாயிரும். பரிசுத்த வெண்மையின் துய்யதான தாபரமே! தயைக் கடலே! தவிப்பவர்களுக்குத் தடாகமே! தனித்தவருக்குத தஞ்சமே! உமது இன்பமான சன்னிதானம் தேடி வந்தோம். ஆறு, காடுகளைக் கடந்து ஓடி வந்தோம். துன்பம், பிணி, வறுமை முதலிய கேடுகளினாலே வாடி நொந்தோம். எங்கள் நம்பிக்கை வீண் போகுமோ? எங்கள் மன்றாட்டு மறுக்கப்படுமோ? எங்கள் யாத்திரைகள் பலன்ற்றதாய்ப் போகுமோ? எங்கள் அழுகைக் கண்ணீர் உம்முடைய இருதயத்தை உருக்காது போகுமோ? அப்படி ஆகுமோ? ஐயா, எங்கள் அன்பான தகப்பனே! எங்களை முழுவதும் ஒப்புக்கொடுக்கிறோம். எங்களைக் கையேற்றுக்கொண்டு ஆசீர்வதித்தருளும். ஆமென்.

# அன்பும் இழப்பும் நிறைந்த ஒரு நினைவஞ்சலி

அம்மா ஒரு வருடம்
நீர் இல்லாமல் கடக்க
உம் அன்பு வழியில்
நங்கள் நடக்க
கற்று தந்தாய்
நீர் இருக்க
நித்தமும் இறைவனை
நங்கள் பணிக்க
உம் நினைவுகளில்
எங்களை மறக்க
மகிழ்வோடு இறைவன்
மடியில் நீர் இருக்கவேண்டி
கண்ணீரோடு வாழ்த்தும்

உம் அன்பு கணவர்,
பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார் உறவினர்கள்
மற்றும் நண்பர்கள்



